★ விலை ரூபா 1-00

ஈழநாடு
THE EELANADU

மலர் 24 கார்த்திகை 23 ஸபர் 22 இதழ் 299
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 9—12—82

# கைலாசபதிக்கு கனத்தை மயானத்தில் இறுதி அஞ்சலி

## கெனமன், 'சூரியர்', 'வித்தி' கலந்துகொண்டனர்

(கொழும்பு)

பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதியின் சிதைக்கு, கனத்தை மயானத்தில் அவரது புதல்விகளான சுமங்கலா, பவித்ராவும், சகோதரரான ஸ்ரீபதியும் தீவைத்ததைத் தொடர்ந்து அவர் அக்கினியுடன் சங்கமமானார்.

பேராசிரியர் கைலாசபதியின் பூதவுடலைத்தாங்கிய பேழை, கார்பவனியாக அவரது பம்பலப்பிட்டி இல்லத்திலிருந்து நேற்றுமாலை 4 மணிக்குப் புறப்பட்டுக் கனத்தை மயானத்தை வந்தடைந்தது.

முன்னாள் அமைச்சர்களான திரு. செல்லையா குமாரசூரியர், திரு. பீட்டர் கெனமன் ஆகியோரும் மயானத்தில் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள். விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், கலைஇலக்கிய நண்பர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

களனி பல்கலைக் கழகத் தொல்பொருளியல் விரிவுரையாளர் திரு. சேனகபண்டார நாயக்கா, தேசிய கலை இலக்கியப் பேரவையைச் சேர்ந்த (8-ம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க இலங்கை ராஜதந்திரி வெளியேற்றப்படுவார்?

## மீண்டும் பனஞ் சாராயம்

[யாழ்ப்பாணம்]

நத்தார், புதுவருட விருந்தாக பனஞ்சாராயம் நீண்ட (8 ம் பக்கம் பார்க்க)

## ஸ்கொட் வெளியேற்றம் மீது அமெரிக்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதரக முதலாவது செயலாளர் (அரசியல்) திரு. நந்தா கொடகேயை இலங்கைக்குத் திருப்பி அழைக்குமாறு அமெரிக்க அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதராலய முதலாவது செயலாளர் (அரசியல்) திரு. கென்னத் மன்ரோ ஸ்கொட், நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டதன் எதிரொலியாகவே அமெரிக்க அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சரவைக் கூட்டத்தின்பின் நேற்றுப்பிற்பகல் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளரும் ராஜாங்க அமைச்சருமான திரு. ஆனந்த திஸ டி அல்விஸ், திரு நந்தாவைத் திருப்பி அழைக்குமாறு அமெரிக்கா விடுத்த கோரிக்கை பற்றிய தகவலை வெளியிட்டார்.

இலங்கையிலுள்ள அமெரிக்கத்தூதரகமுதலாவதுசெயலாளர் திரு. ஸ்கொட்டை நாட்டைவிட்டு வெளியேறுமாறு அமைச்சரவை கடந்த புதன்கிழமை தீர்மானித்ததை தொடர்ந்து 7 நாள் அவகாசம் வழங்கப்பட்டது.

திரு. ஸ்கொட் பாகிஸ்தான் 'எயர் லையன்' விமானமூலம் நேற்றுமுன்தினமிரவு 10-30 மணியளவில் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் விசேட சலுகைகள் எதுவுமின்றி நாட்டைவிட்டு வெளியேறினார்.

திரு. ஸ்கொட் நாடு கடத்தப்பட்டதற்கும், திரு நந்தா இங்கு திருப்பி அழைக்கப்படுவதற்கும் தொடர்பு இருக்கின்றதா என்று நிருபர் ஒருவர் கேட்டபோது, இரு விஷயங்களும் வெவ்வேறானவை என்று அமைச்சர் ஆனந்த திஸ டி அல்விஸ் தெரிவித்தார்.

திரு. ஸ்கொட்டை நாட்டைவிட்டு வெளியேற உத்தரவிட்டது வேறு விடயம் எனத் தெரிவித்த ராஜாங்க அமைச்சர், இலங்கைத் தூதரக முதலாவது செயலாளர் திரு. நந்தா கொடகேயை திருப்பி அழைக்குமாறு அமெரிக்கா விடுத்த கோரிக்கையை மறுபரிசீலனை செய்யுமாறு இலங்கை அரசு விடுத்த கோரிக்கையை [8-ம் பக்கம் பார்க்க]

## 'தேவன்' காலமானர்



(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் பிரபல எழுத்தாளரும், விமர்சகரும், பேச்சாளருமான இளைப்பாறிய யாழ். இந்துக் கல்லூரிஆசிரியர் திரு. இளையதம்பிமகாதேவா (தேவன்) நேற்றிரவுயாழ். ஆஸ்பத்திரியில் காலமானர் என்பதைவருத்தத்துடன்தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின்ஈமச்சடங்குகள் இன்று திருநெல்வேலியில் நடைபெறும்.

## ஆயுதபடையினர் கைதுசெய்த மயில்வாகனம் எங்கே?

### 15-ம் திகதி நீதிமன்றில் தெரிவிக்க வேண்டும்

[கொழும்பு]

ஆயுதப் படையினரால் 82 ஜூலை மாதம் கைது செய்யப்பட்ட சுழிபுரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மயில்வாகனம் என்ற இளைஞர் எங்கே இருக்கிறார் என்பதைச் சட்டமாஅதிபர் இம்மாதம் 15-ம் திகதி நீதிமன்றத்தில் தெரிவிக்கவேண்டுமென அப்பீல் நீதிமன்றம் பணித்துள்ளது.

அப்பீல் நீதிமன்றத்தில் நேற்று சிற்றம்பலம் வெங்கடாசலத்தினால் தாக்கல்செய்யப்பட்ட ஆட்கொணர்வுமனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதார் சார்பில் சட்டத்தரணி ஏ. புள்ளநாயகம், சட்டத்தரணி சி. சந்திரசேகரம் ஆகியோர் ஆஜரானார்கள்.

அம்மனுவில், கணபதிப்பிள்ளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மறுதினம் மயில்வாகனம் ஆயுதப்படையினரால் கைதாகி விசாரணை செய்யப்பட்டபின் விடுதலை செய்யப்பட்டாரென்றும், மீண்டும் கைது செய்யப்பட்டாரென்றும் அவரது தாயார் சுகவீனமுற்றிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. [இ]

## கோண்டாவில் இரட்டைக் கொலை: தம்பதிகள் துப்பாக்கியாலும் சுடப்பட்டுள்ளனர்!

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் மேற்கில் நடைபெற்ற கொள்ளைச்சம்பவத்தின்போது கொலைசெய்யப்பட்ட வயோதிபத் தம்பதிகளின் உடல்களிலிருந்து 5 எஸ்-ஜிரக குண்டுகள் எடுக்கப்பட்டுள்ளன.

கொள்ளையடித்த இனந்தெரியாத கோஷ்டியினர், வீட்டுக்காரரான சின்னப்பு மார்க்கண்டு (வயது 70) வை கத்தியால் வெட்டியும், கைத்துப்பாக்கியால்சுட்டும் கொலை செய்தனர். இவரது கையில் இருவெட்டுக்காயங்களும், 3 துப்பாக்கிச் சூட்டுக்காயங்களும் காணப்பட்டன. இவரது மனைவி நல்லம்மாவின் உடலில் இருதுப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

இப்பயங்கரச் செயலில் ஈடுபட்ட கோஷ்டியினரின் கண்களிலிருந்து தப்பிக்கிடந்த சிறு ரொக்கம் உட்படச் சுமார் 70 ஆயிரம் ரூபா பெறுமதியான [8-ம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணத்தில் எதிரணியின் மூன்று கூட்டங்கள்

[யாழ்ப்பாணம்]

சர்வஜன வாக்கெடுப்பிற்கு எதிராகச் சுதந்திரக்கட்சியின் தலைமையிலான எதிரணியினரின் கூட்டங்கள் இம்மாதம் 16-ம் திகதி யாழ்ப்பாணம், சுன்னாகம், பருத்தித்துறை ஆகிய இடங்களில் நடைபெற உள்ளன.

இக்கூட்டங்களில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா திரு. பீட்டர் கெனமன், கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா, திரு அனில் முனிசிங்கா, திரு சரத் முத்தெட்டுவேகம ஆகியோர் உரையாற்றுவார்கள். [க]

## யாழ். செயலக வங்கியில் கள்ள 100ரூபா நோட்டுகள்!

### கிளிநொச்சி வாசி விசாரணையில்

[யாழ்ப்பாணம்]

யாழ். அரசாங்க செயலகத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளைக்கு வைப்பிலிட வந்த 55,200 ரூபா ரொக்கப் பணத்தில் இரண்டு 100 ரூபா நோட்டுக்கள் கள்ள நோட்டுக்களெனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியைச் சேர்ந்த செல்லத்துரை கோபாலபிள்ளை என்பவர் செயலகக்கிளை வங்கியில் இந்தப்பணத்தை வைப்பிலிடச் செலுத்தினர். நோட்டுகளைப் பரிசீலனை செய்த வங்கி ஊழியர் இரண்டு இருநூறு ரூபாய்த் தாள்கள் கள்ள நோட்டுக்களெனக்கண்டுபிடித்தனர்.

யாழ். பொலிஸ் விசேட புலனாய்வுப் பகுதியைச் சேர்ந்த ஸ்டீபன் சந்தேக நபரைக் கைது செய்து யாழ். நீதவான் திரு ரி. ஜோகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்தார்.

சந்தேகநபர் கோபாலபிள்ளை சரீரப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

## யாழ். மாவட்டத்தில் விளக்குச் சின்ன பிரசுரங்கள்: எதிரணியினர் ஆட்சேபம்!

(யாழ்ப்பாணம்)

அபிப்பிராய வாக்கெடுப்புச் சட்டத்தின் 50 (1 வது ஷரத்தைமீறி யாழ். மாவட்டத்தில் பகிரங்க இடங்களிலும் இ. போ. ச. வாகனங்களிலும் விளக்கு சின்னத்திற்கு வாக்களிக்கும்படி மக்களைத் தூண்டும் பிரசுரங்கள் ஒட்டியுள்ளதைக் கண்டித்து அரசாங்க அதிபருக்கும், உதவிப் பொலிஸ்மா அதிபருக்கும் முறையிட்டு நடவடிக்கை எடுக்கும்படி கோருவதென எதிரணிக் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கம்யூனிஸ்ட்கட்சியின் யாழ். மாவட்டக் காரியாலயத்தில் திரு. பொன். குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இம் மாதம் 22ந்திகதி நடைபெறவுள்ள சர்வசன வாக்கெடுப்பில் தமிழ் பேசும் மக்கள் ஏகோபித்து அரசின் ஜனநாயக விரோதக் கருத் [8-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சண்டிலிப்பாய் கதிரியாப்புலம் வளவு 32 பரப்பு உடன் விற்பனைக்கு உண்டு. காணி பார்வையிடுவதற்கு P. இலங்கைநாதன், சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய் காணி விலை விபரங்கட்கு: "செல்வி மில்", கைதடிச் சந்தி (5391)

பத்து தொன் பாரம் ஏற்றக் கூடிய றெயிலர் (Trailor) விற்பனைக்கு உண்டு. மின்கவைற், யாழ்ப்பாணம் (5397)

EL 4123 ஒஸ்ரின் டெவன் மோடல் வான் (சொந்தப் பாவிப்பிலுள்ளது) விற்பனைக்குண்டு. தொடர்பு; திருமதி ரி. வி ஜி. பெர்னாண்டோ, இல. 18, மேல் இத்திபெத்த, மொறட்டுவ. (5407)

சுன்னாகம்
பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
சுன்னாகம்

## அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 2000க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும், வெற்றுப்பரல்களும், குறுணல் அரிசியும், கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச்சாக்குகளுக்கு ரூபா 250/-உம், ஏனையவற்றிற்கு ரூபா 50/-உம் மீளளிப்பு வைப்புப் பணமாகச் செலுத்தி சங்க வேலை நாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

17-12-82 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

பொது முகாமையாளர்.
சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
7-12-1982. (5411)


## பிரசாரக் கூட்டங்கள்

(மட்டக்களப்பு)

சர்வஜன வாக்கெடுப்பை எதிர்த்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரசாரக் கூட்டம் இம்மாதம் 11-ந் திகதி மட்டக்களப்பிலும், 12-ந் திகதி பட்டிருப்பிலும், 13-ந் திகதி கற்குடாவிலும் நடைபெறவிருக்கிறது.

சர்வஜன வாக்கெடுப்பை எதிர்த்து அகில இலங்கை தமிழ்காங்கிரசின் பிரசாரக் கூட்டம் மட்டக்களப்பில் இம்மாதம் 13-ந் திகதி நடைபெறவிருக்கிறது. (க)

## பேரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் இலக்கியவட்ட இணைச் செயலாளர் திரு யாழ்வாணன் விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் தெரிவித்ததாவது:

"ஈழத்தில் பேரறிஞரும் சமீபகால இலக்கிய விமர்சகரும் யாழ் பல்கலைக்கழக பேராசிரியருமான க. கைலாசபதி மறைவு அறிஞர் உலகுக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். இவரது பிரிவால் வாடும் இவரது குடும்பத்தவருக்கு யாழ் இலக்கிய வட்டம் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கிறது"

## மனிதர்களுடன் நெருங்கி பழகும் அதிசயக்கொக்கு!

(மன்னார்)

இலங்கையில் இதுவரைகாலமும் காணப்படாததும், வெளிநாட்டைச் சேர்ந்ததெனவும் கூறப்படும் பாரிய அதிசய கொக்கு ஒன்று கடந்தவெள்ளிக் கிழமை எருக்கலம்பிட்டி கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்டது.

சுமார் 6 அடி உயரமான இக்கொக்கு மனிதர்களுடன் நெருங்கிப் பழகி வருகிறது.

இக்கொக்கினை பெருந்திரளான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். கொக்கை தெகிவளை மிருகக்காட்சிச் சாலைக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை எருக்கலம்பிட்டி மத்தியமகாவித்தியாலய உயர்தர விஞ்ஞான வகுப்பு மாணவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

## பண்டத்தரிப்பில் நடந்த மௌன ஊர்வலம்

(பண்டத்தரிப்பு)

மதகுருமார் இராணுவ விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவிக்கு முகமாக பண்டத்தரிப்பு பத்திமாதா ஆலயத்திலிருந்து ஐந்து மைல் நீள மௌன ஊர்வலம் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று நடாத்தப்பட்டது.

பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட்திரு. சகாயம் அடிகளார் மேற்படி ஆலயத்தில் நடாத்திய பூசையை தொடர்ந்து நடைபெற்றஇந்த மௌன ஊர்வலம் பண்டத்தரிப்பு சந்தி, சித்தங்கேணிச் சந்தி, சங்கானை, தொட்டிலடி ஆகிய இடங்களுக்கு ஊடாக சென்று மீண்டும் பத்திமாதா ஆலயத்தை அடைந்தது.

"பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட மதகுருமாரை விடுதலை செய்க" "அவர்களை குற்றம் செய்தால் நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை செய்க" போன்ற பல சுலோக அட்டைகளை தாங்கிய வண்ணம் சிறுவர், சிறுமியர், பெண்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் இந்த மௌன ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்,

# மன்னார் செய்திகள்

### இடமாற்றம்

[மன்னார்]

மன்னார் மாவட்ட நீதவானாகக் கடமையாற்றும் திரு. எச் எம். எச். பி. மடவெல வரும் ஜனவரி மாதம் முதல் கண்டி மாவட்ட நீதவானாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் ஆரம்ப நீதிமன்ற நீதவானாகக் கடமையாற்றும் திரு. வி. சிதம்பரநாதன் மல்லாகம் ஆரம்ப நீதிமன்ற நீதவானாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

### சந்தேக நபர் விடுதலை

தலைமன்னார் - கொழும்பு இரவு தபால் ரயிலில் இடம்பெற்ற 32 ஆயிரம் ரூபா கொள்ளைச் சம்பவம் தொடர்பாக விசாரணைக்குட் படுத்தப்பட்ட சந்தேகநபர் விடுதலை செய்யப்பட்டார்.

பேசாலை தபால் நிலையத்தில் உதவி தபால் அதிபராகக் கடமையாற்றுபவரும் முருங்கனைச் சேர்ந்தவருமான திரு கனகரட்ணம் என்பவரே விடுதலைசெய்யப்பட்டவராகும்.

### நாளை பிரதமர் உரையாற்றுவார்

சர்வசன வாக்கெடுப்பிற்கு ஆதரவாக நாளை வியாழக்கிழமை மன்னார் பட்டினசபை மண்டப முன்றலில் நடைபெறும் பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா கலந்து கொண்டு உரையாற்றுவார்.

மன்னாருக்கு விஜயம் செய்யும் பிரதமரை குதூகலமாக வரவேற்பதற்கான ஏற்பாடுகளை மன்னார் மாவட்ட அமைச்சர் ஜனாப் எம். ஈ. எச். மஹ்றூப் மன்னார் முன்னை எம். பி. ஜனாப் எம். எஸ் ஏ. றகீம் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

### மழையும் காற்றும்

மன்னார் மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் பலத்த காற்றுடன் பலத்த மழை பெய்து வருகிறது.

இதனால் மன்னார் மாவட்ட கரையோரப் பகுதி மீனவர்கள் மீன்பிடித் தொழிலுக்குச் செல்லவில்லை.

பேசாலை தலைமன்னார்ப்பகுதியைச் சேர்ந்த இழுவைப்படகுகள் யாவும் மன்னார் துறைமுகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பாக கட்டி வைக்கப்பட்டுள்ளன.

### நேரடித் தொலைபேசி

மன்னார்-கொழும்பு நேரடித் தொலைபேசிச் சேவை இம்மாத இறுதியில் ஆரம்பித்து வைக்கப்படும் மூதூர் எம். பியும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்றூப் இந்தத்தகவலைத் தெரிவித்தார்.

### ரூ 16,500 நிவாரணம்

முசலி கூழாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த 33 ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு உலகதரிசன இயக்கம் தலா 500 ரூபா வீதம் 16,500 ரூபாவை வழங்கியுள்ளது.

இப்பணத்தைக் கொண்டு அக்குடும்பங்கள் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையில் ஈடுபட ஊக்கமளிக்கப்படும்.

இப்பணத்தை கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. அருள்செல்வன் 33 குடும்பங்களுக்கும் வழங்கினார்.

### விபரங்களை சேகரிக்கக்குழு

மன்னார் மாவட்டத்திலுள்ள ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கும் பொருட்டு மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையினால் ஆசிரியர்களை நியமிப்பதற்கும ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவுள்ள பாடசாலைகளின் விபரங்களைச் சேகரிக்கவும் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது

மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையினால் நியமிக்கப்பட்டுள்ள இக்குழுவில் மன்னார் எம். பி திரு பி. எஸ். சூசைதாசன் மன்னார்மாவட்ட அபிவிருத்திசபைதலைவர் திரு பி எம். செபமாலை, மன்னார் அரசாங்க அதிபர் திரு ஏ ஜே செந்தில் நாதன் ஆகியோர் அங்கம்வகிக்கின்றனர்.

## இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 23ம் திகதி
வியாழக்கிழமை
(9—12—82)

மேடம்: சூழ்ச்சியின் உச்சக்கட்டம் வேதனையில் வீழ்த்திவிடும். ஆழ்ந்த சிந்தையுடன் காரியத்தில் கண் வைப்பீர்கள். தொழில் விடயத்தில் கவனம் விரும்பத்தக்கது.

இடபம்: கைகொடுத்து உதவுவதற்கு தந்தை முன்வருவார். காரிய சித்தியு கிட்டும். நீண்டநாள் எதிரிகள் மீண்டும் நண்பர்கள் ஆவார்கள். கிருப்திகரமான தினம்.

மிதுனம்: தொழில்துறையில் நல்லமாற்றம் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நண்பர்கள் மூலம் புதிய தொடர்புகள் ஏற்படும். இன்று சு தினம்.

கடகம்: சகோதர பாசம் தலைதூக்கி நிற்கும். கைத்தொழில் விருத்திக்கு இடம் உண்டு. பெரியோர்கள் ஆதரவும் பெருகும். மகிழ்ச்சிகரமான தினம்.

சிங்கம்: கடன் தொல்லைகள் அதிகரிக்கும். கூட்டு வியாபாரம் ஏமாற்றத்தை தரலாம். தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும். இயந்திரங்களுடன் பழகுபவர்கள் கவனமாக இருக்கவும்.

கன்னி: பிள்ளைகளின் தொல்லைகள் கவலையைத் தரும் பிறருடன் பகைத்துக் கொள்ளவும் நேரிடும். குடும்பத்திலும் சிறிது பூசல் வீசலாம். வெளியிடத் தொடர்புகளில் அமைதிவேண்டும்.

துலாம்: பிரச்னைகள் பல இன்று நல்ல முடிவை அடையும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிலவும். பேச்சில் நிதானம் பெருமையைத் தரும். சிப்புத் தன்மை விரும்பத்தக்கது

விருச்சிகம்: தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும். கண்துடைப்பு வேலைகளும் நடக்கும் எதிலும் கவனம் செலுத்தவும். பெரியோரைப் பகைத்துக் கொள்ளாமல் பொறுமையுடன் நடக்கவும்.

தனு: வாகனம் செலுத்துவோருக்கு இன்று நன் மதிப்பு கிடைக்கும். தாய்வழித் தனவரவிற்கும் இடம்உண்டு. கல்வித்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும்.

மகரம்: இதயத்தின் ஏக்கம் இன்று தணியும். தேடிய பொருள் இன்று காலடியில் சரணடையும். பரோபகார சிந்தை மேலிடும் நண்பர் ஒருவருக்குக் கை கொடுத்து உதவுவீர்கள்.

கும்பம்: எக்காரியத்திலும் அதிக கவனம் செலுத்துவது விரும்பத்தக்கது உதவி செய்யப்போய் குறைகேட்க நேரிடலாம் உடல் நலத்தைப் பேணிக் கொள்ளவும்.

மீனம்: உள்ளத்தில் உவகைக்கூத்து. உறவினர்கள் வருகை வாழ்க்கை நிரம்பியதாக இருக்கும். மனதில் புதிய எண்ணங்கள் தலைதூக்கும். எதிலும் தூய்மையைக் காண விரும்புவீர்கள்.

சோதிடக்கலாநிதி
திருமதி
க. வேலுப்பிள்ளை

## அபிவிருத்திசங்கம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி அபிவிருத்திச் சங்கக் கூட்டம் கல்லூரி அதிபர் திரு. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்றபோது இம்மாதம் இளைப்பாறிய கல்லூரி அதிபரின் இடத்துக்கு அதிபராக திரு வி. பாலசுந்தரத்தை நியமிக்கக் கோரும் தீர்மானம் உட்பட சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கண்ணியமாகக் கற்பிக்க வேண்டும்

(கரவெட்டி)

பாடசாலை ஆசிரியர்கள் வகுப்புக்களில் கண்ணியமாகக் கற்பித்தால் பிரத்தியேக வகுப்புக்களுக்கு இடமிருக்காது. தங்களுடைய பிள்ளைகளை ஒழுங்காகவும் சீராகவும் அனுப்புவதில் பெற்றோர் அக்கறை காட்ட வேண்டும்.

இவ்வாறுயாழ் பிரதமகல்வி அதிகாரி திரு. வீ. சபாநாயகம் வல்வை சிவகுரு வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு. நல்லதம்பி தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

வல்வெட்டித்துறை நகரசபைத்தலைவர் திரு ச. ஞானமூர்த்தி, கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா, கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ வ. தங்கராசா, உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரி திரு வ. க. ஈசுரபாதம் ஆகியோர் உட்படப் பலர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

## நாளை கொழும்பில் மனித உரிமை தின மகாநாடு

(கொழும்பு)

ஐ. நா. மனித உரிமை தினத்தின் 34வது வருடாந்த தேசிய மகாநாடு புதிய நகர மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது. (இ)


சிங்கப்பூர்/மலேசியாவில் வேலையாட்கள்
**Diggers உடனடியாகத் தேவை**

DIGGERS: ஆழக்கிணறு, ஆழக் குழிகள் அமைக்கும் வேலைகளுக்கு
அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை

பாஸ்போட், தொழில் அனுபவ சான்றிதழுடன்
கீழ் வரும் உரும்பிராய் விலாசத்திற்கு
இன்று (9-12-82) வியாழக்கிழமை அல்லது
நாளை (10-12-82) வெள்ளிக்கிழமை
நேர்முகப் பரீட்சைக்கு வரவும்.

A. குமாரசாமி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

தலைமை அலுவலகம்:
**Construction & Development Co. Ltd,**
37, S. de S Jayasinghe Mawatte, Nugegoda.
தொழில் அனுமதிப்பத்திரம் இல: 96
தொழில் அங்கீகாரம் இல: F E/1/118
(5413)

# "இராணுவ நடவடிக்கைகளை பாக். பலப்படுத்தமாட்டாது!"

## றீகனுக்கு ஜெனரல் ஸியா உறுதி

வாஷிங்டன், டிச. 8

"இந்தியாவின் இராணுவ வலிமையைச் சமாளிக்க பாகிஸ்தான் தனது இராணுவ நடவடிக்கைகளை வலுப்படுத்தாது பாகிஸ்தான் அணுவாயுதங்களைப் பெறுவதில்லை, சேகரிப்பதிலோ அக்கறை கொள்ளவில்லை" என்று பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஸியாவுல் ஹக் நேற்று வெள்ளை மாளிகையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகனிடம் கூறினார்.

இப்பேச்சுவார்த்தை 80 நிமிடங்கள் நடைபெற்றது.

இரு தேசங்களின் கூட்டுழைப்பு, தொடர்புகள், மத்திய மேற்காசியாவின் அமைதிக்கான நடவடிக்கைகள், ஆப்கானிஸ்தானின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் ஜனாதிபதி றீகனும் ஜெனரல் ஸியாவுல் ஹக்கும் உரையாடினர்கள்.

ஆறு ஆண்டுகளில் 300கோடி டாலர் பெறுமதியான இராணுவ உதவிகளை அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அளிக்கும் எனவும், 'எவ்-16' ரக விமானத் தொகுதி பாகிஸ்தானுக்கு இம்மாத முடிவுக்குள் அனுப்பப்படும் என்றும் இப்பேச்சுவார்த்தையில் முடிவாகியுள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஸியாவுல் ஹக்கின் அமெரிக்க விஜயத்தின் முதல் நாளிலேயே, அமெரிக்க-பாகிஸ்தான் பொருளாதார, விஞ்ஞான, தொழில்துறைகளிலான கூட்டு ஒப்பந்தம் வாஷிங்டனில் கைச்சாத்தானது குறிப்பிடத்தக்கது. (உ)

## இந்திய ராஜதந்திரிகள் சுட்டுக்கொலை!

கம்பாலா, டிச. 8

உகண்டா தலைநகர்கம்பாலாவில் இந்தியத் தூதரகத்தினைச் சேர்ந்த இரு ராஜதந்திரிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்!

இராஜதந்திரிகள் இருவரும் தூதரகத்திற்குள் சென்று கொண்டிருக்கும் போது இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதுவரை கொலைகாரர்யார் என்பதும் எதற்காக சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்பது பற்றிய விபரங்கள் அறியமுடியவில்லை. [உ]

## ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் தமிழக முதல்வர் எச்சரிக்கை

சென்னை, டிச. 8

தமிழகத்தில் நடைபெற்றுவரும் தொடக்கநிலைப்பள்ளி ஆசிரியர்களின் வேலைநிறுத்தம் இன்று முதல மூன்று நாட்களுக்கு இடைநிறுத்தம்செய்யப்பட்டுள்ளதாக ஆசிரிய சங்கத் தலைவர் திரு. ஈஸ்வரன் கூறினார்.

தமிழக மாநில அரசின் சத்துணவுத் திட்டத்திலிருந்து தம்மை விடுவிக்கக்கோரிய தொடக்கநிலைப்பள்ளி ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் செய்கின்றனர்.

தமிழக முதலமைச்சர் திரு. எம் ஜி ராமச்சந்திரன்; இவ் வேலைநிறுத்தம் தொடருமானல் கடமைக்குச் செல்லாத ஆசிரியர்களுக்குப் பதிலாகப் புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று நேற்று அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ்கட்சி ஆசிரியர்களின் கோரிக்கை நியாயமானது என்று கூறி வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. (உ)

## பொதுச்சந்தை நாடுகளில் பொருளாதார நெருக்கடி

பிரஸல்ஸ், டிச. 8

பொதுச்சந்தை நாடுகள் யாவும் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடிகளில் சிக்கியுள்ளன என்று அண்மையில் ஐரோப்பிய பொருளாதார சமாஜத்தின் பொருளாதார, நிதி, தொழில், சமூகவிவகார அமைச்சர்களது பிரசல்ஸ் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

"ஐரோப்பியபொதுச்சந்தை நாடுகளில் வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரித்துள்ளது. 1 கோடி 10 லட்சம் மக்கள் வேலையின்றியுள்ளனர். அமெரிக்கா நிர்ப்பந்திக்கும் கொள்கையினல்தான் மேற்குஐரோப்பாவின் பொருளாதார ஸ்தம்பித நிலை ஏற்பட்டுள்ளது" என்று அரசியல் விமர்சகர்களும் பொருளாதார நிபுணர்களும் கருதுகிறார்கள்.

"மேற்கு ஐரோப்பா, அமெரிக்காவைக் காட்டிலும் பொருளாதார பலம் பெற்றுத் திகழ்கிறது. இதனைச் சீர்குலைக்க அமெரிக்கா முயற்சித்துவருகிறது" என்று பேராசிரியர் ஜியோர்ஜ் ஆர்பதாவ் என்ற நிபுணர் கூறுகிறார்.

பிரஸல்ஸ்கூட்டத்தில்கலந்து கொண்டவர்கள் கூட இந்த முடிவினை ஏற்றுள்ளனர் அமெரிக்கா தனது நேசநாடுகளினூடாகப் பொதுச்சந்தை நாடுகளின் பிரச்னைகளைத் தூண்டிவிடுகிறதென்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

உருக்கும், துணிவகைகளும் அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் மேற்கு ஐரோப்பாவின் பிரதான பொருள்களாகும். இந்த ஏற்றுமதிகளைக் கட்டுப்படுத்த மேற்கு ஐரோப்பிய நாடுகள் மீது அமெரிக்கா பல நடவடிக்கைகளைஎடுத்துள்ளது என்றும் இத்தகவலை மேற்கு ஐரோப்பிய நாடுகள் தமதுபொருளாதார, வர்த்தக நலன்களைப் பாதுகாக்கப் பல நடவடிக்கைகளை எடுத்திருப்பதை அண்மையில் தொலைக்காட்சிஉரையொன்றில் ஜனாதிபதி றீகன் கண்டித்திருப்பது ஊர்ஜிதப்படுத்துகிறதென்றும் அதேவேளையில் அமெரிக்காவும் இதே பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

## இரசாயன ஆயுதங்கள் பாவிப்பு:

## அமெரிக்க குற்றச்சாட்டை சோவியத் மறுக்கிறது

வாஷிங்டன், டிச. 8

தென்கிழக்காசியாவிலும். ஆப்கானிஸ்தானிலும் இரசாயன ஆயுதங்களை சோவியத் யூனியன் உபயோகித்ததாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியிருப்பதை சோவியத் ஏடான "டாஸ்" மறுத்துள்ளது.

சோவியத்யூனியனும் அதன் நேசநாடுகளும் ஆப்கானிஸ்தான், லாவோஸ், காம்புச்சியா ஆகிய நாடுகளில் இரசாயன கிருமி ஆயுதங்களைப் பயன்படுத்தியதாக அமெரிக்க இராஜாங்க இலாகா வெளியிட்ட அறிக்கையில் குற்றம் சாட்டியிருந்தது.

"சோவியத்யூனியன் தான் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் இத்தகைய பொய்களை ஏற்கனவே பல தடவைகள் உறுதியாக மறுக்கப்பட்டுள்ளது அதுமட்டுமல்ல, ஏற்கனவே சோவியத்யூனியன் இரசாயனஆயுதங்களைப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் தென்கிழக்காசியாவின் பல பகுதிகளுக்குச்சென்றுபார்வையிட்ட அமெரிக்க நிபுணர்கள் குழு ஒன்று இதற்கு ஆதாரம் எதுவுமில்லை என்றும் தெரிவித்துள்ளனர்என்றும் 'டாஸ்' தெரிவித்துள்ளது.

"ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியன் இத்தகைய ஆயுதங்களைப் பாவித்ததற்கான தடயங் ளெதுவுமில்லை என்று 'வாஷிங்டன் போஸ்ட்'டும் இதர அமெரிக்கப் பத்திரிகைகளும் எழுதியுள்ளன இதே போல் பிரபல அமெரிக்க நிபுணர்களும் கூறியுள்ளனர். அதே வேளையில், அமெரிக்கா உற்பத்திசெய்த இரசாயன ஆயுதங்கள் ஆப்கனில், எதிர்ப்புரட்சியாளர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன" என்று 'டாஸ்'கூறுகிறது.

## 'ஆசியாட்' கிராமம் மூடப்படுகிறது

புதுடில்லி, டிச 8

நடந்துமுடிந்த 9வது 'ஆசியாட்' விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொண்ட 33 நடுகளின் தேசியக் கொடிகளினை இறக்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

9வது 'ஆசியாட்' விளையாட்டுக்கிராமம் இன்று உத்தியோப்பூர்வமாக மூடப்படும். [உ]

## வட அயர்லாந்து குண்டுவெடிப்பு:

## 'நாங்களே பொறுப்பு' அயர்லாந்து தேசிய விடுதலை இயக்கம் அறிவிப்பு

லண்டன், டிச 8.

வட அயர்லாந்தில் கடந்த ஞாயிறு, மதுபானவிற்பனை நிலையத்தில் நடைபெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்துக்கு தாமே பொறுப்பாளிகள் என்று அயர்லாந்து தேசிய விடுதலை இயக்கம் இன்று அறிவித்தது.

கடந்த ஞாயிறு அயர்லாந்திலுள்ள மதுபான விற்பனை நிலையத்தின் கூரைமீது ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவத்தினல் 150 பேர் காயமடைந்தனர். 17 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன இவர்களில் பெரும்பலானேர் பிரிட்டிஷ் இராணுவ வீரர்களும் அவர்களது மனைவிமார்களுமே.

குண்டு வெடிப்பு நிகழ்ந்த போது மதுபான விற்பனை நிலையத்தில் பிரிட்டிஷ் இராணுவ வீரர்களும் அவர்களது மனைவிமார்களுமே இருந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

"இத்தகைய குண்டு வெடிப்புகளினலோ பயங்கரச் செய்கைகளினலோ பிரிட்டிஷ் அரசை பயமுறுத்தி பணிய வைக்கமுடியாது இத்தகைய செயல்களில் ஈடுபடுவோரைப் பிரிட்டிஷ் அரசாங்கம் தீவிர நடவடிக்கைகள் மூலம் அழித்து விடமுடிவுசெய்துள்ளது என்று பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரட் தட்சர் இன்று விடுத்துள்ள செய்தியில் கூறினர். உ

## கடல் பாதுகாப்புச் சட்டம்

ஜமேக்கா, டிச 8

ஐ. நா.வின் சர்வதேச கடல் பாதுகாப்புச் சட்டத்தில் பாரதம் கைச்சாத்திடும் என்றும், இச்சட்டம் வரலாற்றுச் சிறப்புடைய சட்டங்களில் ஒன்று என்றும் இந்திய அரசின் செய்தி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இச்சட்டத்தில் அமெரிக்கா கைச்சாத்திட மறுத்துள்ளது தெரிந்ததே.

பிரான்ஸ், சோவியத்யூனியன், கனடா, லத்தீன்அமெரிக்க நாடுகள், கரிபியன் பிராந்திய நாடுகள், பாரதம் ஆகிய நாடுகள் கைச்சாத்திடஉள்ள முதல் தொகுதி நாடுகளாகும். [உ]

## எட்டயபுரத்தில் வெளிநாட்டு தூதுக்குழுவினர்

மதுரை, டிச 8

பாரதி நூற்றாண்டை முன்னிட்டு தமிழகத்துக்கு விஜயம் செய்துள்ள பிரான்ஸ் சோவியத்யூனியன், டென்மார்க் தேச தூதுக்குழுவினர் நேற்று மதுரையில் நடைபெற்ற பாரதியார் பற்றிய கருத்தரங்கில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

நேற்றுமாலை பாரதியின் பிறந்த இடமான எட்டயபுரத்துக்கு விஜயம் செய்த தூதுக்குழுவினர் பாரதியின் வாழ்வோடு தொடர்புடைய இடங்களைப் பார்வையிட்டனர். (உ)

## குறிப்பிட்ட நாட்களில் பூரண மது விலக்கு

புதுடில்லி, டிச. 8

"சம்பள நாட்கள், காந்தி ஜயந்தி, தியாகிகள் தினம், சமய திருநாட்கள், விசேட பண்டிகைத் தினங்கள் ஆகிய தினங்களில் நடு முழுவதும் பூரண மதுவிலக்கு நடைமுறையில் கொண்டுவரப்பட வேண்டும்" என்றுநேற்று புதுடில்லியில் நடைபெற்ற மதுவிலக்குப்பற்றிய மாகாநாட்டில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இம்மகாநாட்டில் சகல மாநிலங்களையும் சேர்ந்த அமைச்சர்களும். தலைவர்களும் கலால்துறை உயர் அதிகாரிகளும் பொதுசனத் தொண்டர்களும் கலந்து கொண்டனர்.

'உணவு விடுதிகள், விருந்து பசாரங்கள், கொண்டாட்டங்கள், திரைப்படங்களில் மதுபான பாவனைகளைத் தடை செய்ய வேண்டும், இதுநாடு முழுவதிலும் செயற்படுத்தப்பட வேண்டும்" என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இளவாலையில் கஜமுகசங்காரம்

[யாழ்ப்பாணம்]

இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயத்தில் கஜமுகசங்காரம் இம்மாதம் 20ம் திகதி மாலை நடைபெறவுள்ளது. பிரசித்தி பெற்ற இவ் ஆலயத்தில் தினசரி இப்போது விநாயகர் கதை படிக்கப்பட்டு வருகிறது.

சுழிபுரத்திலிருந்து மாவிட்டபுரத்துக்கு மாருதப்புரவல்லி வந்துகொண்டிருந்த போது, இளவாலையில் குறிப்பிட்ட இடத்தில் யானை விழுந்து வணங்கியபடியால், இவ்விடம் ஆனைவிழுந்தான் என்று அழைக்கப்பட்டது பிரசித்தி பெற்ற ஆலயமாகவும் இது வழங்கிவருகிறது.

இவ்வாலயத்தின் பரிபாலகர்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஈரான்-ஈராக் யுத்தநிறுத்தம்; 3 அம்சத்திட்டத்தை ஈரான் வெளியிட்டது

தெஹ்ரான், டிச. 8

ஈரான்-ஈராக போரை நிறுத்துவதுதொடர்பாகமேற்கொள்ளப்பட்ட முயற்சிகளினைத் தொடர்ந்து நேற்று ஈரான் மூன்று அம்சத்திட்டத்தை வெளியிட்டுள்ளது.

ஈரானின் மூன்று அம்சத் திட்டத்தில்: ● ஈரான்-ஈராக் போர்தவிர்த்தல் நிபந்தனை, ● நடைபெற்ற போரில் ஏற்பட்ட இழப்புகளுக்கு நஷ்டஈடு கோருதல் ● வளைகுடா நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே உள்ள எல்லைத்தகராறுகளை தவிர்க்கும் ஈரானிய ஆலோசனைகள் ஆகியவை அடங்கியுள்ளன.

புதுடில்லியில் மார்ச்மாதம் நடைபெறும் அணிசேரா இயக்க நாடுகளின் உச்சிமகாநாட்டுக்கு முன்னர் ஈரான்-ஈராக் போரை நிறுத்துவதில் அணிசேரா இயக்கநாடுகள் அக்கறைகொண்டு செயற்பட்டு வருகின்றன.

அணிசேரா இயக்கநாடுகள் வளைகுடாவில்போரை நிறுத்த மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி கண்டுள்ளபோதிலும். ஈரானின் அண்மைக் காலப் போக்குகள் வளைகுடாவில் போரை நிறுத்தி அமைதி நிலை நிறுத்தும் சாத்தியங்களைக் கொண்டுள்ளதாக அணிசேரா இயக்கநாடுகள் நம்பிக்கை கொண்டுள்ளன. (உ)

## மணிவாக்கு

ஒலியைக் கொண்டே ஒரு பாத்திரம் உடைந்ததா இல்லையா என்பதை உணர்ந்து கொள்ளலாம்; அதுபோல் மனிதனையும் அவன் பேச்சில் இருந்தே அறிவுடையவனா, மடையனா என்பதை அறிந்து கொள்ளலாம்.

— டெமாஸ்தனிஸ்

# நமது நோக்கு

## விவசாய பல்கலைக்கழகம்

“கிளிநொச்சியில் அத்துமீறிக் குடியேறியோரின் காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளன. இக் காணிகளில் விவசாயப்பல்கலைக்கழகமும் ஆராய்ச்சிநிலையமும் அமைக்கப்படும். இதற்கானநடவடிக்கையை நான் மேற்கொள்வேன்” என்று யாழ். அரசாங்கஅதிபர் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்.

இது ஒரு அரசியல்வாதியின் கூற்றல்ல; அமைச்சர்களின் வாக்குறுதியும் நீர்மேல் எழுத்துபோல் வாழ்க்கை நிலையாமையை உணர்த்தும் தன்மையன. கிளிநொச்சியில்பேசப்பட்ட யாழ் பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம் ‘பொய்யாய் பழங்கதையாய் - கனவாய் போனதுவே’ என்று நாம் நினைத்திருந்தோம்.

“யாழ்ப்பாணத்தவரின் பசியை ஆற்றவல்ல பூமி கிளிநொச்சியே” என்று சொல்லி மறைந்தும் மறையாதவர் சிவயோகசுவாமி அவர்கள்.

சுவாமிகளின் தீர்க்கதரிசனம் திரு. தேவநேசனின் மன உறுதியிலிருந்து மீண்டும் உதயமாகின்றது போலும்!

கட்டிப்போட்டு அடித்தாலென்ன அடித்துப்போட்டுக் கட்டினாலென்ன, விவசாய உயர்கல்வி தனிப்பல்கலைக் கழகத்தில் அமையலாம்: அல்லது யாழ். பல்கலைக்கழகத்தின் பீடமாக இருக்கலாம்.

கோயம்புத்தூரிலிருக்கும் வனவியற் கல்லூரி ஒரு தனித்துவ வனநிறுவனமென்பதை, இங்கிருந்து அங்கு உயர்கல்விக்குப்போய் வந்த பலர் வியந்துகூறுவர்.

பொருத்தமான இடத்தில் பொருத்தமான பயிற்சி நிறுவனம் அமைவதை எவரும் வரவேற்பர்; யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு இம்மியும் நகருவதில்லையென்று விரதமிருக்கும் இப்பகுதி மக்கள் கிளிநொச்சிக்குப் போகவேண்டியது அவசியமானால் அதனைப் பரவாய் பண்ணுவீர்கள்.

அது எவ்வாறாக, இலங்கை அரசு யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி நெடுங்காலம் பறைசாற்றியபோதும்; இரண்டு மிக அவசரமான திட்டங்களுக்கு உதவ இன்னுமே பின்னிற்கின்றது.

ஒன்று நாம் இங்கு குறிப்பிடும் விவசாயக் கல்லூரியும் ஆராய்ச்சி நிலையமும்; இரண்டு மகாதேவா தாம் போதி.

இவ்விரண்டும் “ஆண்டிப் பண்டாரம் உனைவேண்டிக் கொண்டேனே” என்றகாவடிச்சிந்துப் பாட்டை நினைவூட்டுகிறது; பொழுதுபோக்குக்கு பொதுமக்கள் அக்காலத்தில்பாடித்திரிந்த பாட்டு இது.

‘காவடிசிந்து’ வைக் கைவிட்டு காரியத்தில்துரிதமாக இறங்கவேண்டுமென்பது யாழ் அரசாங்க அதிபருக்குத் தெளிவாகிறது. வடக்கில் நிலவும் பல பிரச்சினைகளுக்கு இந்தத் திட்டம் செயற்படுவதால் வழிபிறக்கும்.

விவசாயமும் கால் நடை அபிவிருத்தியும் முக்கியமாகக் கொண்ட ஒரு இலங்கை-லிபியாக் கம்பனியின் சாதனைகள் இன்று அம்பலமாக்கப்பட்டு வருகின்றன. மிகப் பிரமாண்டமான பணம் கோழி வளர்ப்புக்கே இலங்கை மக்கள் பேரில் முதலீடு செய்யப்பட்டதாம் ஏமாற்றமே இதன் வரலாற்றின் தலையங்கமாகக்காணப்படுகிறது.

வடக்கிலோ, தெற்கிலோ விவசாய அபிவிருத்தியென்றால் அது கமக்காரனின் பண்புகளை அலட்சியம் செய்து உருவாகும் முயற்சியாகக் காணப்படுகிறது.

விவசாயக் கல்வி இன்றும் ஏட்டில்தான் நடைபெறுகிறது; பட்டம் பெறுவோர் தங்கள் ஏடு மூலம் பிழைக்கும் வழியையே நாடுகின்றனர்; ஆராய்ச்சிகளே நூல்கள் மூலம் நடைபெறுகின்றன.

இந்த நாட்டின் பொதுக் கல்வி முறையில் விவசாயம் ஒரு முக்கிய பாடமாகக் கருதப்படுவதில்லை.

உணவுத் தட்டுப்பாடு நாடு சுதந்திரமடைந்த காலம் தொட்டு நிலவிவந்த போதும் இந்த நாட்டின் உணவு உற்பத்தியில் அக்கறை கொண்ட இளைஞர் குழாம் இன்றும் உருவாகாதது நாட்டின் தவக்குறைவா அல்லது ஆட்சியின் பலவீனமா?

நீண்ட காலம் நாம் கனவு காணும் விவசாயக் கல்லூரி இறைவன் அருளாலும், ஆட்சியின் விழிப்பாலும் உருவாகின், எமது சுபீட்சம் நிச்சயமாகிவிட்டதென்று முடிவு கட்டிவிடலாகாது.

இங்கு படிக்கும், பயிற்சி பெறும் மாணவர்கள் சிந்தனைத் திருப்தி, செயற்திருப்தி அடையும் வகையில் கல்லூரி அமைப்பு, பணியாற்றும் போதனாசிரியர்களும் ஊழியர்களும் பொருத்தமான வகையில் வாய்ப்படைய வேண்டும்.

இதற்கு ஏற்ற சுவாத்தியத்தையும் சூழ்நிலையையும் விருத்தி செய்யும் பொறுப்பு யாழ்ப்பாண சிரேட்ட பாடசாலைகளுக்கு உரியது; இவற்றின் மனப்போக்கு மாறாது போனால் நாம் எதிர்பார்க்கும் ‘புரட்சி’ கனிவடையாது.

எவ்விதத்திலும் பணம் சம்பாதித்தால், எந்த நெருக்கடியிலும் நமக்கு உணவு கிடைக்குமென்ற தப்பபிப்பிராயம் இனிமேல் எவரையும் ஏமாற்றமாட்டாது.

நகரங்களிலுள்ள பெரிய கல்லூரிகள், தங்கள் மாணவர் கிராமப்புறங்களில் கிடைக்கக்கூடிய பண்ணைகளில் பயிற்சிபெறும் திட்டத்தை முன்னின்று செயற்படுத்தினால் இளைஞர் உள்ளத்தில் பெருமாற்றம் ஏற்பட முடியும்.

கமமும் கல்வியும் ஒன்றிணைந்த வாழ்க்கையை நடத்திய எம்முன்னோரின் வாரிசுகளே நாங்கள். இன்று ‘விஞ்ஞானக் கல்வி மூலம் கமம்’ என்பது ஒரே ஒரு வேறுபாடு ஆனால் எம் சமூகத்தின் மேம்பாட்டுக்கு இன்றியமையாத வேறுபாடு அது.

### பேராசிரியர் கைலாசபதி

# கொட்டிமுழக்கிவிட்டு குறுவயதில்சென்றுவிட்டார்

“என்னருமை நண்பா
இனிய கலைரசிகா
தன்னிகர் இல்லாத் தமிழ்ச்
செல்வா - மன்னுமுளம்
தத்தளித்து நின்றுன் சரம
கவி பாடுதற்கோ
இத்தனை நாள் வாழ்ந்திருந்
தேன் யான்?”

என்று ரசிகமாணியின் மறைவையொட்டி கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை பாடினார். இன்று கைலாசின் பல்லாயிரம் மாணவச் செல்வர்களும் நண்பர்களும் சிந்தை குளிரச் சிரித்தொளிரும் நின் முகத்தை எந்நாள் காண்பேன் என்று ஏங்கிநிற்கின்றனர்.

கைலாஸ் அவர்கள் அறிவிலும் ஆற்றலிலும் தலைசிறந்து விளங்கியவர். தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் உயர்ந்த புலமை வாய்க்கப்பெற்றவர் ஒப்பியல் இலக்கியத்தில் தமிழுலகின் தனிநாயகனாகத் திகழ்ந்தார். திறனாய்வு அவருடன் பிறந்த கலை “செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை” என்று ஒரு காலத்திற் கூறப்பட்டது. திறனாய்வுக்கு கைலாஸ் என்பது தமிழ் கூறும் நல்லுலகம் ஏற்றுக்கொண்ட உண்மையாகும். தென்னிந்திய அறிஞர்களும் தமது நூல்களுக்கு நமது கைலாசிடமிருந்து ஒரு முன்னுரை பெற்று சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று ஆசைப்பட்டனர். கைலாசபதியின் மாணவன் கைலாசபதி

**எஸ். ஜெபநேசன்**

[தமிழ்-கிறிஸ்தவதுறைத் தலைவர்-யாழ். கல்லூரி]

யின் நண்பன் என்று ஈழத்தவர் இந்தியாவின் இலக்கிய அரங்குகளில் கூறிக்கொண்டனர். கைலாசபதியை அறியாத தமிழறிஞர் அறியாதவரே என்ற அளவுக்கு அவர் ஒப்பாரும் மிக்காருமற்ற தமிழ் மாமலையாக விளங்கினார்.

இனிக்கைலாஸ் என்ற அந்த “உரைக்கல்” இல்லை. இலக்கியத் திறனாய்வாளரின் நாயகன் மறைந்துவிட்டார். பலநூறு அறிஞர்களை உருவாக்கி வந்த தமிழ் உள்ளம் உறங்கிவிட்டது.

பேராசிரியர் கைலாசபதியின் திறமைக்கும் ஆற்றலுக்கும் அவருடைய பலம்வாய்ந்த ஆங்கிலப் பிற்புலம் காரணியாக அமைந்தது. மலேயாவில் இளமையைக் கழித்த கைலாசிற்கு ஆங்கிலம் தாய்மொழி போலவேயிருந்தது. பின்பு யாழ். இந்துக்கல்லூரியில் தமிழ் ஆர்வம் பெற்று கொழும்பு றோயல் கல்லூரியில் இருந்து பல்கலைக்கழகம் சென்ற இந்த முழுத்தமிழன் தமிழ்மீது கொண்ட தணியாத காதலால் தமிழ் சிறப்பு வகுப்பிற் சேர்ந்து கொண்டார். பேராதனையின் அன்றைய தமிழ்வேந்தர்களாகிய பேராசிரியர் கணபதிப்பிள்ளை அறிஞர் செல்வநாயகம் டாக்டர் வித்தியானந்தன் ஆகியோரின் அபிமான மாணவரானார். பல்கலைக்கழகத்தில் துடிப்பும் ஆர்வமும் மிக்க வாலிபனாக விருந்த கைலாஸ் நாடகம் பத்திரிகை இலக்கிய மேடை முதலியவற்றில் சிறந்து விளங்கினார். தமிழ்ச் சிறப்புப்பட்டத்தை முதலாவது வகுப்பில் பெற்றுக் கொண்டார். தினகரன் பத்திரிகையின் ஆசிரியனாகத் தமது வாழ்க்கையை ஆரம்பித்தார். ஆனால் பல்கலைக்கழகமே அவருடைய மனதைப் பெரிதுங் கவர்ந்தது. மாணவர்களால் பெரிதும் மதிக்கப்பட்ட தமிழ் விரிவுரையாளர் கைலாசபதியேயாகும். அவருடைய கடின உழைப்பு மாணவிகளாகிய எமக்கு ஒரு சவாலாக அமைந்தது. இரவு இரண்டு மணிவரைவிழித்திருந்து கட்டுரை எழுதுவார். விரிவுரைக்கு ஆயத்தம் செய்வார். அறிஞரின் பல நூல்கள் இக்காலத்தில் வெளிவந்தன. தமிழுலகம் எங்கணும் அவர் புகழ் பரவியது. Ph. D. படிப்புக்காக கைலாஸ் Birmingham பல்கலைக்கழகம் சென்றார். தமிழ் கிரேக்க வீரயுகம் பற்றி ஒப்பீட்டு ஆய்வு செய்தார். தவத்திரு தனிநாயக அடிகளால் ஒப்புயர்வற்ற ஆராய்ச்சி எனப் போற்றப்பட்டது கைலாசின் Ph. D. ஆய்வுரை.

1974-ம் ஆண்டு யாழ்ப்பாண வளாகம் முகிழ்த்த பொழுது பேராசிரியர் கைலாசபதி அதன் முதலாவது தலைவரானார். வளாகத்தை தன் சொந்தக் குழந்தை போல் வளர்த்துவந்தார். வளாகம் பலவித பிரச்சினைகளையும் எதிர்கொண்டு ஏறுபோற் பீடுநடைபோட்டது. கைலாசபதியின் உழைப்பும் மதிநுட்பமும் மின்னல் வேகத்தில் கருமமாற்றும் சிறப்பும் அதற்கு உரமாக அமைந்தன. கைலாசபதியின் உண்மையான தமிழ் அன்பையும் வித்துவக் கிளர்ச்சியில் அவர் கொண்டிருந்த அப்பழுக்கற்ற ஆர்வத்தையும் அவருடைய எதிரிகள் கூட ஏற்றுக்கொள்வார்கள்.

1977-ம் ஆண்டிறுதியின் அவருடைய ஆசிரியர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரானார். கைலாசபதி தமிழ்த்துறைத்தலைவராகவும் பின்னர் கலைபீடத்தலைவராகவும் பணியாற்றினார்.

[5-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### மீண்டும் ஆட்டம் நடாத்த முன்வருவார்களா

7-12-82 ‘ஈழநாடு’ பத்திரிகையில் யாழ். பாடசாலைகள் உதைப்பந்தாட்டம் “கொக்குவில் இந்து அரை இறுதிக்குத் தெரிவு” எனத் தலையங்கமிட்ட செய்தியை சொல்லுக்குச்சொல் படித்து ஆச்சரியப் பட்டேன். இச் செய்தியில் யாழ். பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் அரை இறுதி பிரவேசத்துக்கான உதைபந்தாட்டப் போட்டி மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றதாகவும் கொக்குவில் இந்து 2—1 என்ற ரீதியில் முன்னணியில் விளங்கிய பொழுது 18 நிமிடங்கள் இருக்கையில் சிலரால் குழப்பப்பட்டதாகவும் இதனால் இப்போட்டியின் மிகுதி 18 நிமிடத்தையும் இரு கல்லூரிகளும் யாழ் விளையாட்டு அரங்கில் ஆடவேண்டும் என சங்கம் அறிவித்தும் ஸ்கந்தா குறித்தமைதானத்தில் சமுகமளிக்காதபடியினால் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு வெற்றி வழங்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

யாழ். பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் பிரவேசக்கட்டணமாக ஒவ்வொரு உதைபந்தாட்டப் போட்டிக்கும் ஆயிரக்கணக்கான ரூபாய்களை ரசிகர்களிடமிருந்து வசூலிக்கின்றது. ஆகையினால் ஒவ்வொரு போட்டிக்கும் சிறு குழப்பமேனும் ஏற்படாமல் தகுந்த பாதுகாப்பு போடாதது பெருங்குறையாகும். இல்லாவிடில் பாதுகாப்பான இடத்தில் இப்போட்டியை வைத்திருக்கவேண்டும். அன்றைய உதைபந்தாட்டம் 18 நிமிடங்களுக்கு முன் சிலரால் குழப்பப்பட்டது இதன் அடிப்படைக்காரணம் என்ன? என்பதைச் சங்கம் ஆராயவேண்டும்.

ஒருசிலர் குழப்பியதற்காக இப்போட்டியில் பங்குபற்றிய கல்லூரி பாதிக்கப்படாது இருக்கவேண்டும். ஆகவே 18 நிமிடங்களுக்கு ஆட்டத்தை மீண்டும் வேறுமைதானத்தில் வைப்பது என்று சங்கம் தீர்மானித்ததிலும் பார்க்க இவ்வாட்டத்தைத் திரும்பவும் பாதுகாப்பான இடமான யாழ் விளையாட்டு அரங்கில் வைப்பது என்று முடிவெடுத்திருந்தால் சிறப்பாக இருக்கும். இதனை ரசிகர்களும் வரவேற்றிருப்பார்கள். ஆகவே யாழ். பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் புனராலோசனை செய்து மீண்டும் ஆட்டத்தை நடாத்த முன்வருமா?

ஆ. சி. கணேசவேல் ஜே. பி.
கந்தரோடை.

## வல்லவர்கள் அற்ப வயதில் மறைவதுவோ!

-- சோ. பத்மநாதன் --

சோதி ஒளிகாலும் தூண்டா மணிவிளக்கு
பாதி இரவினிலே பக்கென் றணைதுபோல,

பூத்துக் குலுங்கும் பொழிலொன் (று), இடியேற்றின்
தீக்கங்கு தாக்க தீய்ந்து வெறி(து) ஆனதுபோல,

நேற்றிருந்தாய்; இன்று வெந்துநீறானாய் என்றசெய்தி
காற்றினிலே வந்துநெஞ்சைக் கலக்கிப் பிழிகிறது!

மேனாட்டார் நோக்கினைநந் தமிழில்-விமர்சனத்தில்-
நீ நாட்டி என்றும் நிலைக்கும் பணிசெய்தாய்!

பார்வை புதிது; பணியோ மிகப்பெரிது;
யார்பாவம், உன்னை யமன்கைப் படவிட்டோம்!

ஆர்த்த சபைகளையும் ஆராய்ச்சி மன்றுகளை
பார்த்து முடித்திறுதிப் பயணந் தொடங்கினையோ!

நல்லவர்கள் துயரம் அடைவதுவோ! நற்றமிழில்
வல்லவர்கள் அற்ப வயதில் மறைவதுவோ!

# "ஹிட்லரின்போலிக் குற்றச்சாட்டுக்கு ஒப்பானது 'நக்ஸலைட்' கட்டுக்கதை!"

## சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமா அறிக்கை

(இ. கந்தசாமி)

"ஹிட்லரின் போலிக் குற்றச்சாட்டுகளைப் போன்றதே ஐக்கிய தேசியக்கட்சியின் 'நக்ஸலைட்' கற்பனைக்கதை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிராகப் பிரசாரம் செய்வதைத் தடுத்து நிறுத்துவதே ஆட்சியாளர்கள் கையாளும் இந்தத் தந்திரம்."

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

"முன்னரும் சுதந்திரக்கட்சி மீது அரசாங்கத்தினர் சாட்டும் குற்றச்சாட்டுகளைப் பற்றி பத்திரிகை மூலம் அறிக்கை விடுத்து மறுத்தேன். மீண்டும் மீண்டும் அவர்கள் எங்களைச் சதி செய்ததாகப் பிரசாரம் செய்கின்றனர். இதனால்; இது குறித்து இப்போது மீண்டும் அது குறித்து மறுத்து அறிக்கை விடவேண்டிய நிலைக்குள்ளாகியிருக்கின்றேன்.

"ஜனாதிபதித் தேர்தலில் வன்முறையைக் கட்டவிழ்த்து விட சுதந்திரக்கட்சியில் ஒரு பகுதியினர் முயன்றதாகக் குற்றஞ் சாட்டப்படுகிறது. எனது புதல்வர் அனுராவைக் கொலை செய்யவும் என்னைச் சிறையிடவும் திட்டம் தீட்டப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர். தங்களில் பலரை சொல்லவும் திட்டமிடப்பட்டதாகவும் 'கதை' சொல்லப்படுகிறது. ஆனால் இவற்றில் எவ்வித உண்மையும் கிடையாது என்பதனை அடித்துச்சொல்கிறேன்:

"நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக நமது ஜனாதிபதி வேட்பாளர் திரு. கொப்பேகடுவ வெற்றி பெற்றால், இந்தவிதமான சதி எவற்றையுமே எமது கட்சியினர் செய்யவேண்டிய அவசியமே இருந்திருக்கமாட் மாட்டாது

"குறிப்பிட்ட சிலரை பெரிய பதவிகளில் நியமிக்க விருந்ததாக ஒரு 'பட்டியல்' போட்டுக் காட்டியிருக்கிறார்கள் ஆட்சியாளர்.

"ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் முடிந்தபின்னர் அக்டோபர் 19ந் திகதி காலை திரு. கொப்பேகடுவவைச் சந்தித்தேன்.

"அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யும் பட்சத்தில் பொறுப்புகளை அமைதியாக ஏற்பது குறித்துப் பேசினேன். பாராளுமன்றத் தேர்தல் முடியும்வரை எவ்வித மாற்றத்தையும் உயர் அரசாங்கப் பதவிகளில் செய்வதில்லை என்ற முடிவையும் அங்கு எடுத்துக்கொண்டோம்.

"புதிய பிரதம நீதியரசர் புதிய சட்டமா அதிபர் ஆகியோர் நியமனங்களையும் புதிதாகச் செய்வதில்லை என்றும் முடிவு செய்தோம்.

"அதே நேரத்தில் எனது குடியியல் உரிமை மீட்பது எப்படி என்பது குறித்து ஆராய்ந்தோம்.

1956-ம் ஆண்டுக்குப் பின் எமது கட்சி பல வெற்றிகளைக் கண்டிருக்கிறது. அச்சந்தர்ப்பங்களில் நாம் எவ்வித சதித்திட்டங்களிலும் ஈடுபடவில்லை. வெற்றிபெறு இடத்து சதித்திட்டங்களை நிறைவேற்ற திட்டமிட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுவது அர்த்தமற்ற கட்டுக்கதை.

'நக்ஸலைட்' கட்டுக்கதை எமது அங்கத்தினர்களை அச்சுறுத்தி, அவர்களை பிரசாரத்திலிருந்து ஒதுங்கச்செய்வதற்கான முயற்சி"

—இப்படி திருமதி சிறிமா தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். (இ)

## "தூய்மையான ஆசிரியப்பணி"

[சுண்டிக்குளி]

"பலனை எதிர்பாராது மாணவர்களின் பெரும் பயனை எதிர்பார்த்து தூய்மையான ஆசிரிய சேவைக்குப் பெருமை தேடியவர் திரு. சி. சொக்கநாதன் இவரின் பொறுப்பு உணர்ச்சியுள்ள சேவையும் தூய்மையான ஆசிரியப்பணியும் ஆசிரியத்தொழிலின் பெருமைக்குச் சான்றாகும்"

இவ்வாறு யாழ்தட்டாதெரு இந்து தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் 35 ஆண்டுகள் சேவையாற்றி ஓய்வுபெறும் ஆசிரியர் திரு. சி. சொக்கநாதனுக்கு வித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் அளித்த பிரிவுபசாரவைபவத்திற்குத் தலைமை தாங்கிய வித்தியாலய அதிபர் திரு. கா. கணேசதாசன் தமது உரையில் கூறினார்.

ஆசிரியர் திரு சொக்கநாதனின் சேவையைப் பாராட்டி ஆசிரியைகள் திருமதிகள் பி. சதாசிவம், ச தெய்வேந்திரம் பிள்ளை, இ இரத்தினசபாபதி பொ. பேராயிரம் ச சிவகுருநாதன் ஆகியோரும் மாணவர்களும் உரையாற்றினார்கள். வைபவ இறுதியில் ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் அன்பளிப்புகள் வழங்கி விருந்துபசாரமும் வழங்கப்பட்டது.

---

"பதவிக்காலத்தை நீடிக்க விரும்புவோர்

# தேர்தல்மூலம் அதிகாரத்தை பெற ஏன் தயங்குகிறார்கள்?"

## மட்டுநகரில் சிறிமா

(மட்டக்களப்பு நிருபர்கள் இரா. உதயகுமார், இரா. துரைரத்தினம்)

"உலக நாடுகளில் இலங்கையிலேயே அரசின் பதவிக்காலத்தை நீடிக்கும் முயற்சி நடக்கிறது. சொந்த நன்மைக்காக சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்படுகிறது. இன்று வரை உலகிலுள்ள நாடுகள் தமது தேசியப் பிரச்னையை முன்வைத்து, மக்கள் கருத்தை அறியவே பொதுசனவாக்கெடுப்பை நடாத்தப்பட்டுள்ளன"

இவ்வாறு கடந்த செவ்வாய் இரவு மட்டுநகர் காந்தி சதுக்கத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா சர்வஜனவாக்கெடுப்புக்கு எதிரான கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்காசமசமாஜக் கட்சி ஆகிய கூட்டுஎதிரணியினரின் தமிழ்பகுதிகளுக்கான முதலா கூட்டம் மட்டக்களப்பு முன்னாள் எம். பியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி பிரமுகருமான திரு ராஜன் செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது. அங்கு திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"தேசிய பிரச்னையை முன்வைத்து மக்கள் கருத்தை அறிய நடாத்தப்படும் சர்வசன வாக்கெடுப்பு இலங்கையில் அரசாங்கத்தினை நடாத்துவோரின் பதவிக் காலத்தை நீடிக்கும் சுய நன்மைக்காக நடாத்தப்படுகிறது.

"சர்வசன வாக்கெடுப்பில் இன்றைய ஆட்சியாளர் வெற்றி பெற்றால் இலங்கையில் கடந்த 51 ஆண்டு காலமாக மக்கள் தமது விருப்பப்படி தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் மக்களாட்சியின் அடிப்படை உரிமைக்கு மூடுவிழா நடந்துவிடும்'

"ஜனாதிபதி தேர்தலில் தமக்கு மக்கள் ஆதரவு வழங்கியுள்ளதாகவும் அதனை அடுத்தே உறுதியான அரசாங்கத்தினை அமைக்கும் பதவிக்காலத்தை நீடிக்க சர்வஜன வாக்கெடுப்பு நடாத்துவதாகவும் கூறுகிறார்கள். ஜனாதிபதி தேர்தலை எந்த நிலையில் நடாத்தினார்கள் என்பது மக்களுக்கு நன்கு தெரியும்.

திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவுடன் போட்டியிடக் கூடிய எனது உரிமைகளைப் பறித்தும், நான் பிரசாரம் செய்வதைத் தடுத்தும் விட்டு தேர்தலை நடாத்தினார்கள்.

தமது அதிகாரத்தைப் புதுப்பித்துக்கொள்ள சர்வசனவாக்கெடுப்பு நடாத்துவதாகக் கூறும் ஐ தே கட்சியினர் ஏன் பொதுத்தேர்தல் மூலம் அதிகாரத்தைப் புதுப்பிக்கத் தயங்குகின்றார்கள்? பொதுத் தேர்தல் மூலம் அரங்கில் வருவார்களேயானால் நிச்சயமாக மக்கள் தகுந்த தீர்ப்பை வழங்குவார்கள்.

### உறுதியற்றவர்கள்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து தூக்கி எறியப்பட்டவர்களும், ஒதுக்கப்பட்டவர்களும், வெறுக்கப்பட்டவர்களுமே இன்று ஐ. தே. கட்சியில் சேருகின்றார்கள்.

இவர்கள் கொள்கை உறுதியற்ற பதவிமோகம் பிடித்த அரசியல் சந்தர்ப்பவாதிகள் தாம் என்பதை ஐ தே. கட்சியில் சேருவதன் மூலம் நிரூபித்துக்காண்பிக்கின்றார்கள். கலாநிதி டபிள்யூ தகநாயக்காவுக்கு நேர்ந்த கதியே இவர்களுக்கும் நேரும். யார் வெளியேறினாலும் வெளியேறிய அரசியல் சந்தர்ப்பவாதிகள் எதைக் கூறினாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செல்வாக்கு குறையவுமில்லை; ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சு அழியவும் இல்லை.

### சொல்லிக் கொடுத்தபடி நடிக்கிறார்

ஐ தே கட்சியினரின் சர்வசன வாக்கெடுப்புப் பிரசாரக் கூட்டங்களின் மேடைகளில் தென்னிந்தியத் திரைப்பட நடிகர் ஜெமினிகணேசன் தேர்தல் பிரசாரம் செய்து வருகின்றார் இந்த நடிகர் எமது நாட்டவரும் அல்ல. எமது நாட்டின் பிரஜையும் அல்ல இவருக்கு எமது நாட்டின்தேசியப் பிரச்னைகள் புரியாது. அவர் ஒரு நடிகர் சொல்லியதை நடிப்பதே அவரின் தொழில். அது போன்றே இன்று இலங்கைக்கு வந்து ஐ தே கட்சியின் அரசியல் பிரசாரமேடைகளில் சொல்லிக்கொடுத்தபடி நடிக்கிறார்.

இந்த நடிகரின் அரசியல் பிரச்சார நடிப்புகள் தொடர்பாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கவுள்ளேன்" என்றார் (உ)

---

## பேராசிரியர்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கைலாஸ் என்ன என்ன வெல்லாமோ சாதிக்கப்போகிறார் என்று அவலோடு நண்பர்கள் எதிர்பார்த்திருந்தனர். 49 வயதிற் சொல்லாமல் கொள்ளாமற் போய்விட்டார்

கொட்டி முழக்கிவிட்டு குறுவயதிற் சென்று விட்ட பண்டிதரே உமது தேகம் பரகதியாச்சோ? எங்கள் பலமெல்லாம் போச்சோ? என்று நாம் கண்ணீர் வடித்து நிற்கின்றோம்.

---

## 'கலங்கரை விளக்கு'

(கோப்பாய்)

'யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கலங்கரை விளக்காய் ஒளிவிட்டுப் பிரகாசித்த இலக்கியமேதை பேராசிரியர் க கைலாசபதியின் மறைவு, அனைத்துலகத் தமிழினத்தின் இலக்கிய வளர்ச்சிக்கு ஈடு செய்ய முடியாத மிகப்பேரிழப்பாகும்" என்று கோப்பாய் அருணோதய இலக்கிய மன்ற முன்னாள் செயலாளரும், கோப்பாய் சூரியோதய சனசமூக நிலைய பொதுச் செயலாளருமாகிய சமூகரத்தினம் எம். கே. இளையப்பு வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## ஒரே மேடையில் இரு தலைவர்கள்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் ஐக்கிய தேசியக்கட்சியினரின் மேடையில் சர்வஜன வாக்கெடுப்பை எதிர்த்து சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உரை நிகழ்த்தினார்.

மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தில் ஐக்கியதேசியக்கட்சி பிரசாரக் கூட்டத்திற்காக தனியார் கம்பனியொன்று பிரமாண்டமான மேடை ஒன்றை ஐக்கியதேசியக்கட்சிக்கு அமைத்துக்கொடுத்திருந்தது. ஐக்கியதேசியக்கட்சிக் கூட்டம் முடிந்த பின்னர் இந்தமேடை அகற்றப்படாமல் அப்படி இருந்தது.

நேற்று அந்த மேடையில் சுதந்திரக்கட்சியினர் சர்வஜன வாக்கெடுப்பிற்கு எதிராக கூட்டம் நடத்தினார்கள் இம் மேடையில்தான் திருமதி சிறிமாவோ உரையாற்றினார்.

---

## கையோடு பிடிபட்டார்!

[கரவெட்டி]

வீடொன்றில்திருடிக்கொண்டிருந்தவர் அந்த வீட்டுச் சொந்தக்காரரிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுக் கொண்டார்.

துன்னாலை வடக்கைச்சேர்ந்த எஸ். தங்கராசா என்பவரது வீட்டில் திருடச் சென்றவருக்கே இந்தக் கதி ஏற்பட்டது

கையும் மெய்யுமாகப் பிடிபட்டுக் கொண்ட திருடனுக்கும் வீட்டுச் சொந்தக்காரருக்கும் இடையில் ஏற்பட்ட சண்டையில் வீட்டுச் சொந்தக்காரர் படுகாயம் அடைந்து மந்திகை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார் அகப்பட்டவர் பருத்தித்துறை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

---

## வரலாற்று வாணர் லண்டனில் காலமானார்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பிரபல 'உவாட் அன்டேன்', நாவலர் கோட்டம், நாவலர் அச்சுக்கூடம், என்பவற்றின் ஸ்தாபகரான மானிப்பாய் ஆ முத்துதம்பிப்பிள்ளை, ஆ. வரசிங்கம் பிள்ளை என்பவர்களின் பேரனும், அவர்தம் வழியிலே இந்த ஸ்தாபனங்களை உரிமையாளராக நடாத்திய வைத்தியலிங்கம் அவர்களின் சிரேஷ்டபுதல்வனாகிய திருவாளர் வை. முத்துக்குமாரசுவாமி பி. ஏ முன்னாள் கொழும்பு புனித சூசையப்பர் கல்லூரி ஆசிரியரும், நூல்பல இயற்றிய வித்தகரும் ஆன வரலாற்று வாணர் தமது லண்டன் இல்லத்தில் 76ம் வயதில் மாரடைப்பினால் 27-11-82ல் காலமானார்.

இவரது சிரேஷ்டமைந்தன் அஜித் அரவிந்தன் முத்துக்குமாரசுவாமி L L. B, I. C. M. A. லண்டன் கணக்காளர் தம் இறுதிக்கடன்களைச்செய்தனர். அமரரின் வாழ்க்கை தமிழ்கூறும் நல்லபணியிலே தமிழுக்கும் சைவத்துக்கும் அமைந்தது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வாழ்க்கைவரலாற்றை முதன்முதலாக விரிவாக ஆங்கிலத்தில் எழுதி நமது சகோதரச் சிங்களப்பெரியார் அறிய வைத்தவரென்னின் அதுமிகையாகாது. மேலும் நாவலர் ஏட்டுப்பிரதிகளை பிரித்தானிய மியூசியத்தில் எடுத்துப்பிரதி பண்ணி அவற்றை இலங்கைப் பத்திரிகைகளுக்கு அனுப்பினார். தமிழ்ப்பெரியார்களைப்பற்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் நூல்களை யாத்து வெளியிட்டு தமிழுக்கு உபகரித்துபுகழுடம்பெய்தினார் கடைசியாக இப் பெரியார் உலகதமிழ் மாநாட்டுக்கு யாழ்ப்பாணம் விஜயஞ் செய்தார். அங்கு அவர் கட்டுரை வெளியிட்டுத் தம்கடமையைச் செய்ததில் பெரிதும் மகிழ்ந்தார் தமிழ்த்தாதாக்கள் வழிநின்ற இவ் வித்தகர் மறைவு உலகுக்கு ஒருபெருங் குறையாகும்.

ஏ வ ஆனந்தநடராஜா

## வல்லைமுக் கொலை வழக்கு:

# "பொலிசுக்கு அளித்தவாக்குமூலத்தில் ஸ்ரீஸ்கந்தராசா பற்றிக் கூறவில்லை"

[புலோலி]

"பொலிசாருக்குக் கொடுத்த வாக்குமூலத்தில் ஸ்ரீஸ்கந்தராசாபற்றி நான் குறிப்பிடவில்லை என்பதையும், இவ்வழக்கில் இருக்கும் சில எதிரிகளை வீணாக மாட்டிவைப்பதற்காகவே, இச்சாட்சியத்தில் ஸ்ரீஸ்கந்தராசாவைக் குறிப்பிடுகின்றேன் என்பதையும் மறுக்கிறேன்' என்று வல்லை விளக்கமறியல் கைதிகள் முக்கொலை வழக்கில் சாட்சியமளித்த கொலையுண்ட விளக்கமறியல் கைதிகளுடன் கொண்டுவரப்பட்டு உயிர்தப்பிய இ. தங்கராசா எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி எட்வேட் சந்திரனுல் குறுக்குவிசாரணைசெய்யப்படுகையில் குறிப்பிட்டார்.

இம்முக்கொலை வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவருகின்றது. தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்பட்ட சாட்சி குறிப்பிட்டதாவது:

சம்பவதினத்தன்று நாங்கள் யாழ். சிறைச்சாலையிலிருந்து கூட்டிவரப்பட்டபோது எங்களுக்குக் கைவிலங்கு மாட்டப்பட்டே கூட்டிவரப்பட்டது. சிறைச்சாலையிலிருந்து பஸ்நிலையம் வரும்வரை நாங்கள் எவரையும் சந்திக்கவில்லை. எங்களை யாழ். பஸ்நிலையத்திற்கு கொண்டுவந்தபோது பருத்தித்துறை பஸ்வண்டி ஒன்று அங்கு நின்றது. சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் எங்களை அந்த பஸ்சில் ஏற்றினர்கள். நான் பஸ்ஸில் ஏறி பஸ்சின் வலப்பக்கத்தில் கைவிலங்கிடப்பட்ட தேவராசாவுடன் இருந்தேன். பஸ் அச்சுவேலி பஸ்நிலையத்தை வந்தடைந்ததும் பஸ்ஸிற்குள் ஸ்ரீஸ்கந்தராசாவையும் வெள்ளையனையும் கண்டேன்.

ஸ்ரீஸ்கந்தராசா பஸ்ஸில் எனக்குப் பின்பக்கமாக நின்றார். அப்போது பஸ்ஸினுள் நிறைந்த பிரயாணிகள் இருந்தார்கள். நான் பஸ்ஸில் வைத்து வெள்ளையனுடனோ, ஸ்ரீஸ்கந்தராசாவுடனோ கதைக்கவில்லை.

சம்பவம் நடந்தபோது உப்புவல்லைச் சந்தியில் ஸ்ரீஸ்கந்தராசாவையோ, வெள்ளையனையோ நான் காணவில்லை. சம்பவம் நடைபெற்றதும் நான் பஸ்ஸில் குதித்து மேற்குப்பக்கமாக ஓடினேன். கைவிலங்கு களற்றப்பட்டபின் தேவராசாவுக்கு என்ன நடந்தது என எனக்குத் தெரியாது.

பொலிசாருக்குக் கொடுத்த வாக்குமூலத்தில் ஸ்ரீஸ்கந்தராச பற்றி நான் குறிப்பிடவில்லை என்பதைமறுக்கிறேன். இவ்வழக்கில் இருக்கும் சில எதிரிகளை வீணாக மாட்டிவைப்பதற்காகவே இச்சாட்சியத்தில் ஸ்ரீஸ்கந்தராசாவை குறிப்பிடுகின்றேன் என்பதை மறுக்கிறேன்.'

இத்துடன் சட்டத்தரணி எட்வேட்சந்திரன் குறுக்கு விசாரணையை முடித்துக் கொண்டார்.

## கிளிநொச்சியில் தொழிற்பயிற்சி நிலையம்


[கிளிநொச்சி]

யாழ். மாவட்டத்திற்கான தேசிய இளைஞர் சேவைமன்றத் தொழிற்பயிற்சி நிலையம் இம்மாதம் 14ம் திகதி கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. 4 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தில் இப்பயிற்சி நிலையம் திறக்கப்படுகிறது. யாழ் மாவட்டதேசிய இளைஞர் சேவைமன்ற அதிகாரி திரு. க. சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் தேசிய இளைஞர்சேவை மன்ற இயக்குநர் சந்திரா திசநாயக்கா, மன்ற அபிவிருத்தி இயக்குநர் திரு. திஸ்ஸவிஜயதுங்க ஆகியோர் கலந்துகொண்டு நிலையத்தின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைக்கவுள்ளனர். அடுத்த மாதம் 15ம் திகதி முதல் இந்நிலையத்தில் பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படும். ஆரம்பத்தில் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் அளிக்கப்படும். இதற்கான ஆயத்தங்களை இளைஞர் சேவைமன்ற உதவி இயக்குநர் திரு. என். நாகேந்திரம் செய்துவருகிறார். (அ)


## இளவாலையில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சபை செயலாளர் திரு. சி. குமாரலிங்கம் இம்மாதம் 20ம் திகதி இவ்விழாவை சிறப்பாக நடப்பதற்கான ஏற்பாடுகளை செய்துவருகிறார்.

# உங்கள் உணவிற்குள் சிறிதளவு அஜி-நொ-மோட்டோ தூவுங்கள்!




நீங்கள் சமைப்பது இறைச்சிக் கறியாக இருக்கலாம், மரக்கறியாக இருக்கலாம் அல்லது சாதாரண தேங்காய்ச் சம்பலாகவும் இருக்கலாம். சோறு, பொரியல், அவியல், கஞ்சி அல்லது எதுவாகவும் இருக்கலாம். உங்கள் சமையல் எதுவாக இருந்தாலும் சிறிதளவு அஜி நொ மோட்டோவைத் தூவி உணவின் இயற்கைச் சுவையைப் பெருக்குங்கள். கரும்பு, பீட்றூட், மரவள்ளி முதலியவற்றின் இயற்கை மாப்பொருளில் இருந்து எடுக்கப்படும் அஜி நொ மோட்டோவை உலகெங்கிலும் 80 நாடுகளில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பாவிக்கிறார்கள்.

சந்தைப்படுத்துவோர்:
கேவ்ஸ் சந்தைப்படுத்தும் பிரிவு
விலை: ரூ. 1/10 லிருந்து

அஜி-நொ-மோட்டோ

உங்கள் உணவின் சுவையை அதிகரிக்கிறது.

Grant K & E 4692


# "நான் அரசியலிலிருந்து ஒதுங்கியிருக்கின்றேன்"

## சந்திரசேகரம் வாக்குமூலம்

[புலோலி]

"நான் அரசியலில் இருந்து ஒதுங்கி கடந்த மாதம் 24ம தேதி கொழும்பு சென்று ஸ்ரீலங்கா போர்ட் கார் கோ கோப்பரேசனில் முன்புபார்த்து வந்த வேலையை பொறுப்பேற்றேன்".

பருத்தித்துறையில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான முன்னாள் பருத்தித்துறை நகரசபை ஐ. தே. கட்சி உறுப்பினர் திரு சந்திரசேகரம் பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்

யாழ் பெரிய ஆஸ்பத்திரியில் வைத்து பருத்தித்துறை பொலிசாருக்கு அளித்தவாக்குமூலத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

''4ம் திகதி பருத்தித்துறையில் நடந்த எனது வீடுகுடி புகுதல் வைபவத்தில் கலந்து கொள்வதற்காக 3ம் திகதி பருத்தித்துறைக்கு வந்தேன்.

''3ம் திகதி பிற்பகல் நான் வீட்டிலிருந்தேன். அப்போது இராசதுரை என்பவர் என்னை சந்திப்பதற்காக வீட்டிற்கு வந்தார்.

''அவருடன் நான் கதைத்து கொண்டிருந்தேன். அப்போது இராசலிங்கம் என்பவர் வந்தார். 3பேரும் கதைத்துக் கொண்டிருந்தோம்.

''சாரமும் சேட்டும் அணிந்த இரு இளைஞர்கள் உள்ளே வந்தார்கள். நடுத்தர வயதுள்ளவர் சுழல் துப்பாக்கியுடன் வந்தவர் என்னை நோக்கி சுட்டார். காயம் ஏற்பட்டது. நான் எழுந்து வீட்டுக்கு உட்புறம் ஓடினேன். பிறகு பிறத்தால் சகோதரிவீட்டிற்கு சென்றேன்.

''என்னை உடனடியாக மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். பின் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டேன். அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. (க)

# சந்திரசேகரத்தை பிரதி அமைச்சர் தலைமையில் சந்தித்தனர்

[யாழ்ப்பாணம்]

துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் பருத்தித்துறை நகரசபையின் முன்னாள் உறுப்பினர் திரு. எஸ். சந்திரசேகரத்தை, பிரதி சுகாதார அமைச்சர் செல்வி ரேணுகா ரணசிங்க தலைமையிலான அதிகாரிகள் குழு நேற்று பார்வையிட்டது.

ஐ. தே. க. செயலாளர் ஹர்ஷா அபேவர்த்தன, யாழ் மாவட்ட ஐ தே க அமைப்பாளர் திரு. க. கணேசலிங்கம் மருத்துவ சேவைபிரதிப்பணிப்பாளர் திரு, ஜோ, பெர்ணண்டோ மற்றும் பல அதிகாரிகளும் நேற்று விசேட விமானமொன்றில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தனர். இந்தக் குழுவினர் யாழ். ஆஸ்பத்திரி அத்தியட்சகர் வைத்திய கலாநிதி நச்சினார்க்கினியனை சந்தித்து. ஆஸ்பத்திரி வசதிகள் குறித்தும் ஆலோசனை நடத்தியதுடன் ஆஸ்பத்திரியிலுள்ள சகல வார்டுகளையும் பார்வையிட்டனர்.

அரசாங்கத்தில் நிதிநெருக்கடி ஏற்பட்டுள்ளதால் கொழும்பு ஆஸ்பத்திரியில் தனியாரால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி வேலைகளைப்போல் யாழ் ஆஸ்பத்திரி அபிவிருத்திக்கும் தனியார் உதவிபெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரியைக் கேட்டுக்கொண்டனர்' (மா)

# "சிந்தனை சகாப்தத்தின் ஒரு வரலாறு" -- ஆ. தேவராஜன்

[யாழ்ப்பாணம்]

''மறைந்த பேராசிரியர் கைலாசபதியின் வரலாறு, ஒரு புதிய சிந்தனை சகாப்தத்தின் அடித்தளம்'' என்று வடமராட்சி கல்வி வட்டம், கதிரவேற்பிள்ளை கலாமன்றம் ஆகியவற்றின் செயலாளர் திரு. ஆ தேவராஜன் விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

பேராசிரியர் கைலாசபதியின் திடீர்மறைவு நம்பவே முடியாத ஒன்றுமட்டுமல்ல, பேரதிர்ச்சியையும் தரும் செய்தியும் கூட. கடந்த 30 ஆண்டுகளாக நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. பள்ளி மாணவனாக இருந்தபொழுது நான் வெளியிட்டுவந்த ''தமிழோசை' காலாண்டு' சஞ்சிகை அவரைஅறிமுகம்செய்து வைத்தது. இலக்கியத்தை வெறும் ரசனைக்காக நோக்கி வந்த பெரும் பாரம்பரிய போக்கை உடைத்து இலக்கியத்தை வாழ்க்கையின் கண்ணாடியாக சமூக பொருளாதார காலக்கண்ணாடியாக நோக்கும் புதிய திருப்பத்தை ஏற்படுத்தினார். பழைய இலக்கியங்களையே இலக்கியங்கள் என்று நம்பியிருந்த சமூகத்தையே சிறுகதை நாவல் போன்ற நவீன இலக்கியங்களின் முக்கியத்துவத்தை ,விளக்கினார்.

பல்கலைக்கழக மாணவனாக பத்திரிகையாளராக பல்கலைக்கழக நிர்வாகியாக பல்கலைக்கழக பேராசிரியராக அவர் ஆற்றிவந்த சேவைகளும், புகுத்திய பெருமைகளும் சமகால சிந்தனைகளில் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன அவர் வரலாறு ஒரு புதிய சிந்தனை சகாப்தத்தின் அடித்தளம் என்பதை எவரும் மறுக்கமுடியாதது. மேலும் பல்லாண்டு வாழ்ந்து பணிபல புரியவேண்டியவர் திடீர் என்று மறைந்தால் அத் தாக்கத்தை எப்படித்தான் தாங்கிக்கொள்வதோ''

## அனுதாபம்

''தமிழ் நாடக நடிகர்களுக்கும் இலக்கியவான்களுக்கும் பேராசிரியர் கைலாசபதியின் மறைவு மிகப்பாரிய இழப்பு என்று நாடக அரங்கக் கல்லூரி பிரசார செயலாளர் தா. க. லோகநாதன் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

''கல்லூரிக் காலங்களிலும், பாடசாலை நாட்களிலும் பல்கலைக்கழக வாழ்க்கையிலும் தனைன தமிழ், தமிழ் கலைக்காக அர்ப்பணித்த பெருமகன் அவர் தமிழ் கலைஞர்களையும் நாடக மன்றங்களையும் ஊக்குவித்து இவ் ஈழத்தில் நல்ல கலையும், தமிழ் கலாச்சாரமும் பரவ அக்கம் தந்த பெரியாரைப் பிரிந்துவாடும் குடும்பத்தவர்களுக்கு நாடக அரங்கக் கல்லூரி தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது என அவர் குறிப்பிட்டார்.

# ‘பயங்கரவாததடைச்சட்டத்தை உடனடியாக நீக்குக!’

## சிமெந்து தொழிற்சாலை தொழிலாளர் யூனியன் கோரிக்கை

(மாவிட்டபுரம்)

“பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இளைஞர்களையும், மதகுருமாரையும் விரிவுரையாளர்களையும் கைது செய்து கொடுமைப்படுத்துவது அநீதியானது. அதுடன் அவசர காலச் சட்டத்தின் கீழ் தொழிற்சங்கங்களை சுயமாக இயங்க முடியாமல் செய்ததும் நீதியாகாது. ஆகவே இவ் விருசட்டங்களையும் உடன் நீக்கவேண்டும்”.

இவ்வாறு ஜனதிபதியை கோரும் தீர்மானமொன்றை காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை சிமெந்து பொதுத்தொழிலாளர் யூனியன் நிறைவேற்றியுள்ளது

யூனியனின் 13வது வருடாந்தபொதுக்கூட்டம் யூனியன் வளவில் திரு. நா. நடராசா தலைமையில் நடைபெற்றபோது மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தை பிரதமர் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு அனுப்புவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் 3ம் கட்டப்பிரிவில் அண்மையில் நடந்த கொலைச்சம்பவம் குறித்தும் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

முன்எப்பொழுதும் இவ்வாறு கொலைச்சம்பவம் இடம்பெறவில்லையெனவும், இன்று நிலவும் நிர்வாக சீர்கேடுகளே இப்படியான சம்பவங்களுக்கு காரணமாகின்றனவென்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. யூனியன் உறுப்பினர்களுக்கு முன்னர் போன்று ஒய்வுகால நன்கொடையாக 500 ரூபா வழங்குவதெனவும் இளைப்பாறும்தொழிலாளர்களுக்கு ஊழியர் சேமலாப நிதிபெறுவதில் ஏற்படும் காலதாமதங்களை நிவர்த்தி செய்யுமாறு சம்பந்தப்பட்டோரை கோருவதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

புதிய நிர்வாகிகள் வருமாறு: தலைவர்:— ச. கணபதிப்பிள்ளை, உபதலைவர்: நா, நடராஜா, இணைக்காரியதரிசிகள் எஸ் கதிரவேலு, கே சுப்பிரமணியம், தனதிகாரி ஆ. கந்தையா. நிர்வாகசபை: ச. கிற்லர், ச கந்தசாமி, க. மாணிக்கவாசகர், எஸ்.ஜோன் ந. நாகராஜா.



மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் எஸ். எம். அபதுல்காதரும் அந்நீதிமன்றத்தின் நீதிபதிகளில் ஒருவரான எச் ரொட்றிகோவும் ஜனதிபதி திரு. ஜே, ஆர் ஜெயவர்த்தன முன்னிலையில் கடந்த 2ம் திகதி உயர்நீதிமன்ற நீதிபதிகளாக பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்ட போது எடுக்கப்பட்ட படம்.


**மனோகரா** யாழ்.நகர்
தினசரி 10-30, 2-15, 4-45
7-00, 9-30
**Odds and Evens**
(Action and Commedy)

**ராஜா** யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் — சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஹலோ மிஸ்டர் ஜமீந்தார்
(கலர்)

**வெஸ்லி** தினசரி 6-30, 9-30 சனி.ஞாயிறு2-30
(மானிப்பாய்) கார்த்திக்—ராதா—தியாகராஜன்
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)

**சாந்தி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
4-வது வெற்றி வாரம்!
எம், ஜி. ஆர்—லதா
நவரத்தினம்
A.P.N. இன் வண்ணப்படம்

5-வது ஜனத்திரள்வாரம்
**றீகல்** (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன்—ஜெயலலிதா
அசோகன்—நாகேஷ்
நான் (ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

**லிடோ** (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—ஜெயலலிதா
சவாலேசமாளி

**ராணி** தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ். நகர்) சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்

**வின்ஸர்** தினசரி 5 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
DEMON SEED
10—13-12-82
எம்.ஜி.ஆர்-சரோஜாதேவி நாடோடி

**ஸ்ரீதர்** தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
(யாழ். நகர்)
BRUCE LEE in
**THE WAY OF THE DRAGON**
த வே ஒவ் த ட்றகன்
Your last chance to see a Karate film......
Your last chance to see a Bruce Lee's film. ....
கராட்டி படத்தைப் பார்க்கக் கிடைத்திருக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவே.........
புரூஸ்லீயின் தீரச் செயல்களை காணக் கிடைக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவே......


★ சட்டத்தரணிகள்

## வண. பிதா சிங்கராயரை சந்திக்க அனுமதி

(கொழும்பு)

யாழ் குருநகர் இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள வணபிதா சிங்கராய அடிகளாரை சட்ட ஆலோசனைகளின் பொருட்டு சட்டத்தரணிகள் சந்திப்பதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்றம் இராணுவத் தளபதிக்கு இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வணபிதா சிங்கராய அடிகளாரை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யக் கோரி இரண்டு தனி ஆட்கொணர்வு மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கப்பட்டிருந்தன

இவ்விரு மனுக்கள் மீதான விசாரணை நேற்றுமுன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டபோது, மேன்முறையீட்டு நீதியரசர்களான திரு. எல். எச் டி. அல்விஸ், திரு ஜே எஸ். அபேவர்தன ஆகியோர் சட்டத்தரணிகள் வணபிதா சிங்கராயரை சந்திப்பதற்கு அனுமதிக்குமாறு இராணுவத் தளபதிக்கு உத்தரவிட்டுள்ளனர். (ஓ)

[பண்டத்தரிப்பு

பண்டத்தரிப்பு தபாவ்நிலையப் பகுதியில் இளைப்பாற்றுச் சம்பளம் பெற்று வருபவர்களின் நலன்கருதி ஒய்வுகாலச் சம்பளம் பெறுவோர் நலன்புரிக் கூட்டுறவுச்சங்கம் என்ற பெயரில் புதியதோர் சங்கம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

## முதலாவது பெண் மருத்துவ பீடாதிபதி

(கொழும்பு

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் முதலாவது பெண் பீடாதிபதியாக பேராசிரியை டி. ஆட்டிகல நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பீடத்தின் பீடாதிபதியாக விருந்த பேராசிரியர் எஸ். ஆர்கொட்டேகொட மலேசியாவில் நியமனமொன்றைப் பெற்றுள்ளதையடுத்தே பேராசிரியை ஆட்டிகல இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மருத்தவ பீடத்தின் 122வருட காலத்தில் முதல்தடவையாக நியமனம் பெற்ற பெண்பீடாதிபதிஇவர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பதவியை தற்காலிகமாகவும் இவர் முன்னர் வகித்துள்ளார். [கி]

## பரவலாக மழை

(வவனியா)

வவனியாவில் பரவலாக மழைபெய்யத் தொடங்கியுள்ளது கிராமக்குளங்களுக்கு ஓரளவு தண்ணீர் வந்துள்ளது இதனால் விவசாயிகள் விதைப்புவேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

விதைநெல்லின் விலை திடீரென அதிகரித்திருப்பதாக சொல்லப்படுகின்றது.

அடுத்தடுத்து இரு தினங்களுக்கு மழைபெய்யுமானல் குளங்கள் நிரம்பி வழியும் அறிகுறி தென்படுகின்றது.

இவ்வருடம் தாமதித்தே இப்பகுதியில் மழைபெய்துள்ளது இதனல் விதைப்பு வேலைகளும் தாமதம் அடைந்துள்ளது.

உதைபந்தாட்டம்:

## முன்னணியில் கனகரத்தினம் ம. ம. வி.

(அரியாலை)

யாழ்ப்பாணப் பாடசாலைகளின் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவிலான இரண்டாம் பிரிவு உதைபந்தாட்டப்போட்டியில் யாழ் கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயம் முன்னணியில் நிற்கிறது.

யாழ் வைத்தீஸ்வரக் கல்லூரிக்கும் யாழ். கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயத்திற்குமிடையே நடைபெற்ற இரண்டாம் பிரிவு உதைபந்தாட்டப்போட்டியில் 2—1 கோல்களால் கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயம் வெற்றிபெற்றது. திரு வி. குணரத்தினம் மத்தியஸ்தம்வகித்தார்.

மூன்றும் பிரிவுக்கான போட்டியில் இரு கோஷ்டிகளும் கோல்கள் ஏதும் போடாமல் சமமாகிக்கொண்டன, இப்போட்டிகள் யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன. (அ)

## சாம்பியன்

(அரியாலை)

யாழ்ப்பாணம் வை. எம்.சி. ஏ ஸ்தாபனத்தின் ஆதரவில் நடைபெற்ற கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாண பரி. யோவான் கல்லூரி கூடைப்பந்தாட்டக் கோஷ்டி சாம்பியனாகியது.

யாழ்ப்பாணய் ட்றிம்மர் விளையாட்டுக் சழகத்துடன் நடைபெற்ற போட்டியில் 38: 30 புள்ளிகளாலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியுடன் நடைபெற்ற போட்டியில் 36: 20 புள்ளிகளாலும், யாழ்ப்பாணம் சென்ற் பற்றிக்ஸ் கல்லூரியுடன் நடைபெற்றபோட்டியில் 40: 30 புள்ளிகளாலும் யாழ் பரியோவான் கல்லூரிக் கோஷ்டி வெற்றுபெற்றுச்சாம்பியனாகியது.

யாழ். வை எம் ஸி ஏ மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதமஅதிதிகளாக இளைப்பாறிய ஆசிரியர்களான திரு திருமதி பிரான்சிஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். [அ]

## தனிக்குடித்தனத்துக்கு மறுத்தார்; கணவன் தற்கொலை

(வவனியா)

தனிக்குடித்தனம் நடத்த வரும்படி கேட்டு மனைவி மறுத்ததினல் கணவன் கிருமிநாசினி அருந்தி மரணமானர்.

இச்சம்பவம் வவனியா குடியிருப்பு என்னுமிடத்தில் நடந்துள்ளது

25 வயதுடைய இராசலிங்கம் அந்தோனி என்ற இளைஞனே இவ்வாறு மரணமாகியுள்ளார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணையை வவனியா திடீர்மரணவிசாரணை அதிகாரி டாக்டர் எஸ்.கே. பாலசிங்கம் நடத்தினர்

விசாரணையில்போது இறந்தவரின் மனைவி சரோஜா (19 வயது) சாட்சியமளிக்கையில்; நாம் திருமணமாகி மூன்று வருடங்கள், எமக்கு ஒரு பிள்ளை இருக்கின்றது. திருமணமானகாலம் முதல் கடந்த 3 வருடகாலமாக எனதுதாய்வீட்டிலேவாழ்க்கை நடத்திவந்தோம்.

சம்பவதினம் கணவர் நாம் வேறு இடத்துக்கு போய் வீடு கட்டி தனியாக வாழவேண்டும் எனக் கூறி என்னை வரும்படி அழைத்தார் நான் வர முடியாது எனக் கூறினேன். இதனல் ஆத்திரமடைந்து தமரேன் கிருமிநாசினி மருந்து குடித்திருக்கலாம் என தெரிவித்தார்.

சாட்சியினை வவனியா பொலிஸ்கான்ஸ்டபிள் திரு. அசோகா ஆஜர்செய்தார்

இறுதியில் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை மரணம் என தீர்ப்பளித்தார்.

## இப்படியும் நடக்கிறது

கிளிநொச்சித் தேர்தல் தொகுதியிலுள்ள வட்டக்கச்சி எனும் சிற்றூரில் ஒரு மகாவித்தியாலயம் இருக்கிறது.

இந்த மகாவித்தியாலயத்தில் சுமார் ஆயிரம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

ஆனாலும், கீழ் வகுப்புக் குழந்தைகளுக்கு இது திண்ணைப்பாடசாலைதான்!

முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரையுள்ள குழந்தைகள் அனைத்துமே நிலத்திலிருந்துதான் கல்வி பெறுகின்றனர்! அவர்கள் இருப்பதற்கு மேசை தளபாடங்கள் எதுவுமே இல்லை!

அடிக்குறிப்பு:

மரங்கள் நிறைந்த வனப் பிரதேசத்தின் ஒரு பகுதிதான் வட்டக்கச்சி.

'ஊடுருவி

## கைலாசபதிக்கு

(1ம் பக்கத்தொடர்ச்சி)

திரு. தணிகாசலம், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த இளங்கீரன், யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் சு. வித்தியானந்தன், 'தினகரன்' ஆசிரியர் திரு. எஸ். சிவகுருநாதன், 'வீரகேசரி' ஆசிரியர் திரு. எஸ். சிவப்பிரகாசம் ஆகியோர் கனத்தை மயானத்தில் இரங்கலுரை நிகழ்த்தினார்கள்.

சில்லையூர் செல்வராசனின் கவிதை பாடப்பட்டது. திரு குலசீலநாதன் பா அஞ்சலி செய்தார். (இ)

## வடக்கில் 3,000 ஊழியருக்கு 300 ரூபா போனஸ்

(கரவெட்டி)

இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு வருடாந்தம் வழங்கப்படும் 300 ரூபா போனஸ் பணம் இம் மாதம் 14ம் திகதி கிடைக்க உள்ளது.

இந்தப் போனஸ் பணத்தை வடபிராந்தியத்தில் சுமார் 3 ஆயிரம் ஊழியர்கள் பெறுகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது [க]


## வடலெபனானுக்கு அவசரத்தேவை

உடனடியாக 100 கூலியாட்கள்

தகைமைகள்:-

[a] 5 அடி 3 அங்குலத்திற்கு மேல்,
[b] நிறை 112 இறாத்தலுக்கு மேல்,
[c] வயதெல்லை 25 — 35 வரை

வசதிகள்:-

தங்குமிடம், சாப்பாடு, வைத்தியச் செலவுகள் இலவசம்.

சம்பளம்:-

150 அமெரிக்க டொலர். அத்துடன் ஓவர்ரைம் வேலையும் உண்டு

உடனடித் தொடர்பு

**N. சிவப்பிரகாசம்,**

54, 3-ம் குறுக்குத் தெரு — யாழ்ப்பாணம்.

தலைமை அலுவலகம்:-

VAUXHALL MILLS CORPORATION,
36/56, Edmonton Road,
Kirillapone
COLOMBO-6

தொழில் அனுமதிப் பத்திரம் இல: 35
தொழில் அங்கீகாரம் இல: J/FE/82 / Misc 5418


## மஞ்சவனப் பதியில் இன்று வாரியார்விருந்து

(யாழ்ப்பாணம்)

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் இன்று மாலை கந்தபுராண விரிவுரை நிகழ்த்துவுள்ளார். இம்மாதம் 13ந் திகதிவரை கந்தபுராண விரிவுரை தொடர்ந்து நடைபெறும். (மா-அ)

## இன்று சாரணர் கதம்பவிழா

[யாழ்ப்பாணம்]

உலக சாரணர் 75 வது வருட பூர்த்திவிழாவை முன்னிட்டு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று மாலை சாரணர் கலைக்கதம்பவிழா நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட சாரணர்கிளைச் சங்கம் இவ்விழாவை ஒழுங்கு செய்துள்ளது.

வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. சிமியாம்பிள்ளை, வடமாநிலப் பொலிஸ் அதிபர் திரு. ஏ. எஸ். ஆனந்தராசா ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்கள். [மா-அ]

## கைவரிசை!

(புலோலி)

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலையத்தில் கறுப்பு முகமூடி அணிந்த மூன்று இளைஞர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நிலையத்தின் பொறுப்பாளர் செல்லத்துரை விக்னேஸ்வரமூர்த்தி இச்சம்பவம் தொடர்பாக பொலிசில் புகார் செய்துள்ளார்.

நேற்றுமுன்தினமிரவு 9-20 மணிக்கு 3 இளைஞர்கள் கறுப்பு முகமூடி அணிந்து துப்பாக்கி, இரும்புக்கம்பி சகிதம் வந்து தன்னை எழும்புமாறும், தனக்கு உதவியாக இருந்த மகேந்திரனை குனியுமாறும் உத்தரவிட்டதாகவும். பின்னர் அங்கிருந்த 1160 ரூபா 60 சதத்தை கொள்ளையடித்துக் கொண்டு சத்தம் போடவேண்டாம் என்று பயமுறுத்திவிட்டுச் சென்றதாகவும் தெரிவித்துள்ளார். [க அ]

## விளக்குச் சின்னம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திறமையாக வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்த கிராமங்கள் தோறும் கருத்தரங்குகளும் தொகுதிவாரியாக பிரசாரக் கூட்டங்களும் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (க)


## மரண அறிவித்தல்

வைத்தியகலாநிதி த. தம்பிநாயகம்

வைத்தியகலாநிதி த. தம்பிநாயகம் 8-12-82-ல் சிறம்பானில் காலமானார். அன்னார் சுன்னாகம் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை தம்பதிகளின் புத்திரனும் சட்டத்தரணி தம்பிரத்தினம் ஜே. பி யூ. எம். காலஞ்சென்ற மகேஸ்வரி விரிவுரையாளர் யாழ் / தொழில் நுட்பக்கல்லூரி) ஆகியோரின் சகோதரருமாவார்.

தகவல்: த. தம்பிரத்தினம்
(5412) முதலியார் வளவு. சுன்னாகம்.



## மரண அறிவித்தல்

இ. மகாதேவா (தேவன்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியர் இ. மகாதேவா [தேவன் மாஸ்டர்] நேற்றுக் காலமானார். இவர் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், உதயஸ்ரீ, விஜயஸ்ரீ, பத்மஸ்ரீ, குகஸ்ரீ, லயஸ்ரீ ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். இறுதிக்கிரியைகள் இன்று [9-12-82] வியாழக்கிழமை மாலை 4-00 மணிக்குத் திருநெல்வேலியில் நடைபெறும்.

கே. குலம், பரமேஸ்வரா வீதி, திருநெல்வேலி,
(5419) யாழ்ப்பாணம்.


## ஆலால் பிரேரணை ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

83-ம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு சம்பந்தமாக யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில், கோப்பாய் எம்.பி திரு. எம். ஆலாலசுந்தரம் கொண்டு வந்த பிரேரணை பின்போடப்பட்டுள்ளது.

இப்பிரேரணையில் யாழ். மாவட்ட எம். பி க்களின் சம்மதம் பெறாமல் யாழ் செயலகத் திட்டமிடல் அதிகாரிகள் சர்வாதிகாரமான முறையில், தமது எண்ணப்படி நிதி ஒதுக்கீடுகளைச் செய்திருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் யாழ். மாவட்ட சபைக் கூட்டம் தலைவர் திரு எஸ். நடராசா தலைமையில் ஆரம்பமானபோது இப்பிரேரணை கொண்டுவரப்பட்டுப் பின் போடப்பட்டது [மா]

## அமெரிக்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

அமெரிக்க அரசு பரிசீலனை செய்வதாகத் தெரிவித்துள்ளதாக அமைச்சரவையில் அமைச்சர் திரு ஏ. சி. எஸ். ஹமீத் கூறியதாகவும் தெரிவித்தார்.

இதனால் இரு நாடுகளின் உறவும் பாதிக்கப்படுமா என்று நிருபர் ஒருவர் கேட்டபோது, இது சின்ன விடயம் என்றும் பாதிப்பு ஏற்பட மாட்டாது என்றும் திரு. அல்விஸ் தெரிவித்தார்.' (க)

## மீண்டும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் விற்பனைக்கு வந்திருக்கிறது!

பனம் பொருள் அபிவிருத்தி சபை இந்தச் சாராயத்தை உற்பத்தி செய்துள்ளது. வடபகுதியின் சகல மதுபான விற்பனை சாலைகளிலும் ஒரு போத்தல் 57 ரூபாவாக இதனைப் பெற்றுக்கொள்ளலாம் என்று பனம் பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. கே. நடராசா தெரிவித்தார்.

## தம்பதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

அடகுவைத்த நகைகள் அடகு வைத்தவர்கள் பெயர்கள் எழுதப்பட்ட தபால் உறைகளுடன் அலுமாரியில் இருக்கக்கண்ட சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பொன். சுகுணேந்திரன். பதில் நீதவான் திரு எஸ். அமிர்தலிங்கத்தின் அனுசரணையுடன் பொறுப்பேற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்தார்.

சிறு சிறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுவரும் ஒரு கோஷ்டியினரே இக்கொலை கொள்ளைச் சம்பவங்களிலும் ஈடுபட்டிருக்கலாம் எனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர். (மா)


பேராசிரியர்

**கைலாசபதி**

மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலி!

**பூபாலசிங்கம்**

புத்தகசாலை

யாழ்ப்பாணம்

தொலைபேசி: 23631

(5415)



# ஹோம் பிறன்ஸ் லிமிட்டெட்

## புதிய உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பிறன்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22370—22438—22537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி;
தொலை பேசி இல; 22273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பிறன்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) ஸ்ரீமணிமலர் ஸ்டோர்ஸ்
இல: 157/2, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு—11
தொலைபேசி இல: 23277

(5) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல; 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.